# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 11 | திங்கட்கிழமை | (27.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 283



ராம்கோ RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.




## குடாநாட்டின் பல பகுதிகளிலும்

## தியாகி திலீபனின் 17 ஆவது நினைவுநாள் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 17வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் யாழ்.குடாநாட்டு மக்களால் மிகுந்த உணர்வெழுச்சியுடன் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வலிகாமத்தில் நல்லூர் கந்தன் ஆலய முன்றலிலும், தீவகத்தில் புளியங்கூடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமுன்றலிலும், காரைநகரில் மணற்காடு அம்மன்கோவில் முன்றலிலும், வடமராட்சியில் அல்வாய் முத்துமாரி ஆலய முன்றலிலும், தென்மராட்சியில் சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய முன்றலிலும் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல்களில் அடையாள உண்ணவிரத நிகழ்வுகள் இடம்பெற்றன.

**தீவகம்**

தீவகத்தில் புளியங்கூடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் பொதுச்சுடரினையும், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன் தேசியக் கொடியினையும், ஊர்காவற்துறை பிரதேச பொறுப்பாளர் றதன் ஈகச்சுடர் ஏற்றி திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சமஷ்டி அமைப்பே சிறந்த வழி

## பேச்சை ஆரம்பிப்பது ஜனாதிபதியின் கையில் என்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி அமைப்பு முறையிலான தீர்வுகாணப்பட வேண்டுமென்று ஒஸ்லோ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் இந்நிலைப்பாட்டை எடுத்துக்கொள்வதில் எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஸ்தம்பிதம் அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அண்மைய ஐ.நா சபை உரை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது,

சமாதானப் பேச்சுவார்தைகள் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலை அடைந்திருப்பதற்குக் காரணம் அரசாங்கமே.

அரசாங்கத்திற்குள் காணப்படும் முரண்பாடான கருத்துக்களும், ஜனாதிபதியினால் தெரிவிக்கப்பட்டுவரும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களுமே ஆகும்.

விடுதலைப் புலிகளின் இடைக் நிர்வாக சபையின் யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளும் பேச்சுக்கள் நடத்தத் தயார் என்றுகூறும் ஜனாதிபதி இறுதித் தீர்வுபற்றிய தீர்மானமும், இப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்சி நிரலில் பட்டியலிடப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்து வருவதுடன், அவர் விடுகின்ற அறிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவே உள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் அறிக்கைகள் மாற்றம் ஏதும் இல்லாமல் ஓரேமாதிரியாக உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் எந்தவிதமான பேச்சுக்களையும் நடத்துவதற்கு ஜே.வி.பி முற்றுமுழுதான எதிர்ப்பைக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து அமைச்சுக்களில் மாற்றம்; விரைவில் வர்த்தமானி அறிவிப்பு

இலங்கை அரசியல் அமைப்பிலுள்ள ஐந்து அமைச்சுக்களில் மாற்றத்தைக் கொண்டுவர ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி, அரசியல் யாப்பு மறுசீரமைப்பு, மகாவலி அபிவிருத்தி, விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் நகர அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களிலேயே மாற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்களில் மாற்றம் கொண்டுவருவதற்குரிய காரணங்கள் ஏதும் வெளியிடப்படவில்லையாயினும், அமைச்சுக்கள் மாற்றம் செய்யப்படுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-8)

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் முஸ்லிகளுக்கு துரோகமிழைத்துள்ளது

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தம் இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய துரோகச் செயலாகும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த இந்தியப் பொருளாதார பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்துபசாரம் ஒன்றில் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்

(நமது நிருபர்)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இருவாரகால சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டினேவிய நாடுகளுக்கு செல்லவுள்ளனர். விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் குழு நாளை மறுதினம் புதன்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக சுவிசர்லாந்தின் தலைநகர் ஜெனிவா செல்லவுள்ளனர்.


சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆறாம் திகதி வரை ஜெனிவாவில் தங்கியிருந்து சர்வதேச சட்ட நிபுணர்களையும், தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்புக்களில் கலந்துகொள்ளவதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்டு ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள சந்திப்புக்களில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா இன்று



சிறப்புமலர் உள்ளே....

## டீசலின் விலை அதிகரிப்பு

## சாதகமான முடிவு இல்லையேல் நாளைமுதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து தனியார் பேருந்து சேவையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த இரண்டு மாதங்களில் நான்கு தடவைகள் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினமும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையேற்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டீசலின் விலை அதிகரிப்பை குறைக்கவேண்டும் எனவும், இதனை அரசு செயற்படுத்தத் தவறும்பட்சத்தில் தாம் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தனியார் பேருந்து சங்கத் தலைவர் ஹெமுனு விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாளை சாதகமான முடிவை வழங்க அரசு தவறும் பட்சத்தில் தாம் அன்று நள்ளிரவு முதல் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு எரிபொருட்களின் விலையை அதிகரிக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# அபுமுஷா தீவிரவாதிகளின் நிலைகள் மீது அமெரிக்க படைகள் விமான தாக்குதல்

## 10 பேர் பலி – 15 பேர் காயம்

(பலுஜா)

ஈராக்கின் பலுஜா நகரில் அபுமுஷாப் அல்-சர்காவி அமைப்பு தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடங்கள் மீது அமெரிக்க போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 10 பேர் பலியாகியுள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக் கப் படைகள் மீது தாக்குதல்களை நடத்து வதற்காக அபுமுஷா அமைப்பினர் பலுஜா நகரில் உள்ள மசூதி ஒன்றிற்கருகே ஒன்று கூடியிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.



மகனே..அய்யகோ ... இது ஒரு பாசமிகு தந்தையின்க தறல். ஈராக், பலூஜா நகரில் அமெரிக்க போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் அப்பாவி மக்கள் சிலர் கொல்லப் பட்டனர், பலர் காயமடைந்தனார். அவர்களில் சிறுவனும் ஒருவன்.

ஜோர்தான் நாட்டு தீவிரவாதியான அபுமுஷாப் அல் -சர்காவி தலைமையிலான இத தீவிரவாத அமைப்பு ஒஸாமா பின் லேடன் தலைமையிலான அல்-கெய்டா தீவிரவாத அமைப்புடன் நெருங்கிய தொடர்பு உடையது.

இவ்வாறான "அபுமுஷா" அமைப்பு தீவிரவாதிகள அமெரிக்கப் படைகள் மீது பெருமெடுப்பிலான தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக பதுங கியிருப்பதாக கிடைத்த உளவு பிரிவின் தகவலை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்கப் படை இவ்வான் தாக்குதலை நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் பலுஜா நகரில் உள்ள பல கட்டடங்கள் சேதமடைந்திருப்பதாகவும் சம்பவத்தில் பலியானோரில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவார்கள் எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக கின்றன.

இதேவேளை கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு இரு அமெரிக்கர்களை அபுமுஷா அமைப்பு தீவிரவாதிகளே சிரச்சேதம் செய்தது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கப் படைகள் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருப்பதாக தகவுல்கள் வெளியாகி

# அமெரிக்க கோடீஸ்வரர்களுள் பில்கேட்ஸ் மீண்டும் முதலிடம்

(நியூயோர்க்)

அமெரிக்க கோடீஸ்வரர்கள் பட்டியலில் மைக்ரோசாப்ட நிறுவனத்தை உருவாக்கிய பில்கேட்ஸ் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

இத்தகவலை "போர்ப்ஸ்" பத்திரிகை வியாழக்கிழமை வெளியிட்ட வருடாந்த கோடீஸ்வரர்கள் தரப்பட்டியல் தெரிவித்தது.

பில்கேட்ஸுக்கு 2 லட்சத்து 21 ஆயிரம் கோடி டொலர் சொத்து உள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது இது கடந்த ஆண்டை விட 9 ஆயிரத்து 200 கோடி அதிகம்.

வர்த்தக முதலீட்டாளர் வாரென் பஃபெட் 2-வது இடத்தைப் பிடித்துள்ளார். இவருக்கு 1 லட்சத்து 89 ஆயிரம் கோடி டொலர் சொத்து உள்ளது.

மூன்றாவது இடம் மைக்ரோசாப் நிறுவனத்தின் இணை நிறுவனர் பவுல் ஆலனுக்கு இவருக்கு 92 ஆயிரம் கோடி டொலர் சொத்து உள்ளது.

அமெரிக்காவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்கிறது. இது குறித்த தகவல்களை வெளியிடும் "போர்ப்ஸ்" பத்திரிகை அமெரிக்காவின் 400 மிகப் பெரும் பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு 262 பேர் கோடீஸ்வரர்கள் பட்டியலில் இருந்தனர்.

## அணுவாயுத தடை ஒப்பந்தம்

# உடனடியாக அமுல்படுத்த 40 நாடுகள் வலியுறுத்தல்

(நியூயோர்க்)

அனைத்துவித அணு ஆயுத சோதனைகளையும் தடை செய்ய வழிவகுக்கும் சிடிபிடி ஒப்பந்தத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு அமெரிக்கா மற்றும் பிற நாடுகளை 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளன.

ஜப்பானின் முக்கிய தீவுகளை சென்று தாக்கக் கூடிய ஏவுகணை சோதனை முயற்சிக்கு வட கொரியா தயாராகி வருவதாக உளவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன என்று ஜப்பான் கூறியது. ஈரானும் அணு ஆயுத சோதனைக்கு முயன்று வருவதாக கூறப்படுகிறது. இதை அடுத்து சிடிபிடி ஒப்பந்தத்தை விரைந்து அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து ஆதரவு நாடு கள் வலியுறுத்தியுள்ளன.

அணு ஆயுதங்களால் ஏற்படக் கூடிய பேரழிவு குறித்தபயம் உலகளவில் வலுவாக உள்ளது என்று பின்லாந்து. ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கூறியுள்ளன அணு சோதனை தற்காலிக செயல்நிறுத்த ஒப்பந்தத்தை 1992 முதல் அமெரிக்கா கடைபிடித்து வருகிறது இருப்பினும் இந்த ஒப்பந்தத்துக்கு அதிகார பூர்வமாக ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த ஒபபநதத்தை அமெரிக்க அதிபர் புஷ் எதிர்ப்பதாக வாஷிங்டனில் பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை 1996 இல் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றக் கொள்ளப்பட்ட சிடிபிடி ஒப்பந்தத்தில் 172 நாடுகள் கையெழுத்திட டுள்ள போதிலும் இதனை 115 நாடுகளே பின் பற்றி வருகின்றன எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ப)

# இரா்ணுவ தலைமை பதவியை துறப்பதற்கு முஷாரப் தயக்கம்

(நியூயோர்க்)

இராணுவத் தலைமைப் பதவியைவிட்டு விலகுவது பற்றி முடிவெடுக்க முடியாமல்



குழப்பத்தில் இருப்பதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள ளார்.

இராணுவத் தலைமைப் பதவியில்இருர் து வில குவது பற்றி இன்னும் முடிவெடுக்க வில்லை. ஆனால், உண்மையில் இப் பிரச்சினை குறித்து மனதில் கவலை ஏற் பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நிலைமைகள் மாறிவிட்டன. தற்போது பின் பற்றப்பட்டுவரும் சமூக, பொருகாா. வெளிநாட்டுக் கொள்கைகளில் தொடர்ச்சி இருக்க வேண்டும் பயங்கரவாத எதிர்ப்பு, இந்தியாவுடன் பேச்சு வார்த்தை ஆகிய நடவடிக்கைகளும் தொடர வேண் டும். இதற்கு உறுதியான ஒரே தலைமை தேவை என நினைக்கிறேன்

எனவே எனது தலைமையில் பாகிஸ்தானில் மனித உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம், பாலியல் சமத்துவம் ஆகியவை மேம்பட்டுள்ளன. பாகிஸ்தானில் 99 சதவீதம் ஜனநாயகம் இருக்கிறது. மீதமுள்ள 1 சதவீதத்தைப் பற்றியே உலகம் கவலைப் படுகிறது என்றார் முஷாரப்புக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையே கடந்த ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஆண்டு இறுதிக் குள் ராணுவத்தின் தலைமைப் பதவியில் இருந்து விலக முஷாரப் ஒப்புக் கொண்டார். அவர் 2007- வது அண்டு வரை அதிபராக இருக்கலாம் என எதிர்க் கட்சிகள் ஒப்புக் கொண்டன.

(ப)

## அசிங்கத்தை காட்டிய ாவிக்கு அபராதம் 25 கோடி

(வாஷிங்டன் )

பிரபலபொப் இசைப் பாடகர் ஜேனட் ஜாக்சன் மார்பகத்தை எதிர்பாரா விதமாக ஒளிபரப்பிய சி.பி.எஸ் ரீ விக்கு 25 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுளளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் சூப்பர் பவுல் அமெரிக்கக் கால்பந்து சாம்பியன் ஷிப் போட்டியின் இடைவேளையின் ஜனாட் ஜாக்சனின் இசை நிகழ்ச்சி நடை பெற்றது.

இதில் இசை நிகழ்ச்சியின் இடையே ஜேணட் ஜாக்கனின் மேலாடையை மற்றொரு பாடகர்அகற்றி விட்டார். இந்த நிகழ்ச்சி ரீவியில் ஒளிபரப்பபட்டதால், ஜேனட்டின் அலங்கோலத்தை, சுமார் 9 கோடி பேர் பார்தது அதிர்ச்சியடைந்தனர்.

இதைத் தொடர்ந்து அநாகரிகமான காட்சியை ஒளிபரப்பியதாக குற்றம் சாட்டி சிபி.எஸ் ரீ விக்கு அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

(ப)

## சவூதி அரேபியாவில் நேற்று பிரஞ் பெண் சுட்டுக் கொலை

சவூதி அரேபியாவில் வைத்து பிரஞ் பெண் ஒருவர் அல் கெய்டா தீவிரவாதிகளால் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டுள் ளார்.

இந்நடவடிக்கையானது சவூதி அரேபியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சவூதி அரசு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து சவூதி அரேபியாவில் இராணுவ பாதுகாப்பு உஷார்ப் படுத்தப்பட்டிருப்பதுடன் எல்லைப் புறத்தினூடான ஊடுருவல்களை தடுக்க வும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ப)

## பணய கைதி கொலை பிரிட்டன் அரசு மறுப்பு

பணயக்கைதியாக உள்ள பிரிட்டன் நாட்டவர் கென்னத் ஹக்லி ஈராக் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார் என இஸ்லாமிய இணையத்தளம் அலிஸா தெரிவித்துள்ளது.

ஆனால் இச் செய்தியை பிரிட்டன் அரசு மறுத்துள்ளது அலிஸா என்ற பெயரில் இணையத்தளம் இருப்பது தெரியும். அது நம்பகமான இணையத்தளம் அல்ல. இச் செய்திக்கு அப்போது முக்கியத் துவம் தர வேண்டிய தில்லை என பிரிட்டிஷ் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

(ப)

## WORLD NEWS உலக தரிசனம்

# அல் - கெய்டா அமைப்பினர் 4 பேர் பிரிட்டனில் கைது

(லண்டன்)

அல்-கெய்டா அமைப்பைச் சேர்ந்த 4 பேர் பிரிட்டனில் வைத்துக் கைது செய்யப்பட்டுள் ளனர்.

வெடிகுண்டு தயாரிப்பிற்கான மூலப் பொருட்களை வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித் தனர்.

இவர்கள் 4 பேரும் வடக்கு லண்டனில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

பிரித்தானியாவில் 2000 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள கைது செய்யப்படட தாக பிரித்தானிய பொலிஸார் தெரிவித் தனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதால் அல்- கெய்டா தீவிரவாதிகள் பிரித்தானியாவிற்கு எதிரான மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தெரியவருகிறது. இது பிரித்தானியாவிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# பயங்கரவாதப் பட்டியலில் இருந்து ஈராக்கை நீக்கியது அமெரிக்கா

(நியூயோர்க்)

ஈராக்கில் இருந்து சதாம் ஹீசேன் வெளியேற்றப்பட்டதை அடுத்து பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து ஈராக்கை அமெரிக்க அதிபர் ஜோர்ஸ் புஷ் நீக்கியுள்ளார்.

ஈராக் அரசின் தலைமையும் கொள்கைகளும் மாறிவிட்டன. சர்வதேச பயங்கரவாதத திற்கு அந்நாட்டு அரசு ஆதரவு அளிக்காது.

அந்நாட்டு அரசாங்கமும் அதற்கான உறுதியை அளித்துள்ளது என்று புஷ் கூறியிருக்கிறார்.

1990 இல் ஈராக் முதன் முறையாக அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றது.

ஈராக்கைத் தவிர தற்போது அந்தப் பட்டியலில் வட கொரியா, சூடான், சிரியா, ஈரான், கியூபா, லிபியா ஆகிய நாடுகள் உள்ளன.

(ப)

# நல்லூரில் இடம்பெற்ற திலீபனின் நினைவு தினக் காட்சிகள்



படங்கள் :-ஞா. ஐங்கரன்

# கனடா ரொறன்ரோவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக் காட்சிகள்



# தென்மராட்சிக் கல்வி வலய வணிக குறுவினா போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட வணிக குறுவினா போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரம் வருமாறு:

**தரம் - 10**

1 ஆம் இடம் - ச.சுவர்ணா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2 ஆம் இடம் - ச.ரகுராஜ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
3 ஆம் இடம் - மு.சுதாகர் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தி.

**தரம் - 11**

1 ஆம் இடம் - அ.கார்த்திக் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2 ஆம் இடம் - பா.கஜலக்ஷன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2 ஆம் இடம் - இ.நிஷாபந்தன் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தி.
3 ஆம் இடம் - இ.தர்சிகா - மீசாலை வீரசிங்கம் மகாவித்தி.

**தரம் - 10**

1 ஆம் இடம் - நி.கேசாந் - கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.
2 ஆம் இடம் - நா. கஜலட்சுமி - மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தி.
3 ஆம் இடம் - வி.நிரோசினி - கச்சாய் அ.த.க.பாடசாலை.
3 ஆம் இடம் - வி.கஜோதா - கைதடி முத்துக்குமாரசாமி ம.ம.வித்தி.
3 ஆம் இடம் - செ.மயூரன் - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.
3 ஆம் இடம் - சி.சிவகுமார் - மட்டுவில் கமலாசனி வித்தி.

**தரம் - 11**

1 ஆம் இடம் - கோ.தாட்சாயினி - சாவகச்சேரி மகளிர் கல்லூரி
2 ஆம் - சு.சுஜிதா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி
2 ஆம் இடம் - ந.ஜெயசக்தி - விடத்தற்பளை கமலாசனி வித்தி.
3 ஆம் இடம் - க.கோகிலன் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி ம.வித்தி.
3 ஆம் இடம் - மு.சதீஜா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**தரம் -13**

1 ஆம் இடம் - க.றஜீந்திரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2 ஆம் இடம் - அ.சஞ்சீவ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
3 ஆம் இடம் - சீ.தினேஸன் - மீசாலை வீரசிங்கம் ம.ம.வித்தி. (ற-127)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு உளளூராட்சி செயலாளர்களுக்கான கலந்துரையாடலும் பயிற்சிப் பட்டறையும் உள்ளூராட்சி அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் உள்ளூராட்சி ஆணையாளரும் மற்றும் உள்ளூராட்சி செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-19)

## புனரமைப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறைப் பிரதேச சபை பல வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில் புலோலி பகுதியில் மந்திகை அம்மன் ஆலய வீதி, கற்கோவளம் புனித நகர் வீதி, திக்கம் மணல் வீதி ஆகியவற்றை 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.


இதைவிட மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரியவளை பாடசாலை வீதி மருதங்கேணி நாகப்பர் வீதி ஆகிய வற்றை பருத்தித்துறை பிரதேச சபை 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. (க-35)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் தென்மராட்சிப் பிரதேசத்தின் மாதாந்த கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா இரவிராஜ் தலைமையில் இராமலிங்கம் வீதி சாவகச்சேரியில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தென்மராட்சிக்கிளை அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இன்றைய அரசியல் சூழ் நிலை என்ற தலைப்பில் கருத்தாய்வு ஒன்று நடைபெறவுள்ளது. (க-127)



தியாக தீபம் திலீபனின் 17 வது ஆண்டு நிகழ்யொட்டி புங்குடுதீவு பிரதேசத்திலுள்ள சகல முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் புங்குடுதீவில் நடைபெற்ற போது யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி சம்பிரதாய பூர்வமாக விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் உரையாற்றுவதையும் விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட ஒரு பகுதி சிறார்களையும் படங்களில் காணலாம்.

# ஜப்பானிய அதிகாரி சந்தேரே குடாநாட்டு நிலைமைகளை ஆராய்ந்தார்

(திருநெல்வேலி)

ஜப்பானிய தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆலோசகர் சந் தேரே தெனக்குரே கடந்த திங்கட்கிழமை யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்தார்.

குடாநாட்டிற்கு வருகை தந்த இவர் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்திற்குச் சென்று யாழ். மாவட்ட அரசியல் துறையின் ஊடகப் பேச்சாளர் இமயவனைச் சந்தித்து குடாநாட்டு நிலைவரங்களைக் கேட்டறிந்தார்.

இதன்பின் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கே.யோகராஜாவைச் சந்தித்து கலந் துரையாடியதுடன், தொழில்நுட்பக்கல்லூரிக்கான உதவிகளை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளார். இவர் இரண்டு நாட்கள் குடாநாட்டில் தங்கி இருந்தார். (ற-43)

# டீசல், பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

, டீசல் மற்றும் பெற்றோல் ஆகயவற்றின் விலைகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.


அதற்கமைய கொழும்பு மாநாகரசபை எல்லைக்கு வெளியே ஒரு லீற்றர் லங்கா ஓட்டோ டீசலின் விலை 42 ரூபாவாகவும் ஒரு லீற்றர் லங்கா 90 ஒக்டெய்ன் பெற்றோல் 68 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதே சமயம் கொழும்பு மாநகரசபை எல்லையினுள் ஒரு லீற்றர் லங்கா ஓட்டோ டீசல் 44 ரூபாவாகவும் ஒருலீற்றர் லங்கா ஒக்டெய்ன் பெற்றோல் 70 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. லங்கா பெற்றோல் 95 ஒக்டெய்னின் புதிய விலை கொழும்பு மாநகர சபைப் பகுதியினுள் 73 ரூபாவாகவும், ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலின் விலை 49.30 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. (க)

# பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக கவர்னர் வாழ்த்து

(சென்னை)

பிரதமர் மன்மோகன் சிங்கின் பிறந்த நாளையொட்டி, தமிழக



கவர்னர் ராம மோகன்ராவ் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள கவர்னரின் வாழ்த்துச் செய்தியில்,


தங்களது பிறந்த நாளுக்குத் தமிழ்க மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் இதயங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான உடல் நலத்தையும் பெற்று நாட்டிற்குச் சேவை புரியவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## குடும்பத்தினருடன் பிரதமர் மன்மோகன்-சிங்

கடந்த 6 நாட்களாக மிகவும் பரபரப்பாகக் காணப்பட்ட பிரதமர் மன்மோக்ன் சிங், நேற்று முன்தினம் முழுவதும் நியூயோர்க்கில் உள்ள மகள வீட்டில் தங்கி மகளுடனும் இதர குடும்ப உறுப்பினர்களுடனும் சந்தோசமாகப் பொழுதைக் கழித்தார்.

அதிபர் புஷ்ஷுடன் சந்திப்பு, ஐ.நா. சபையில் உரை, அதிபர் முஷாரப்புடன் சந்திப்பு என்று கடந்த 6 நாட்களாக பிரதமர் மன்மோகன் மிகவும் பரபரப்பாக இருந்தார். திட்டமிட்டபடி அரசு தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளும் வெள்ளிக் கிழமை இரவு முடிவிற்கு வந்ததையடுத்து நேற்று முன்தினம் முழுவதும் நியூயோர்க்கில் உள்ள தனது மகள் வீட்டில் தங்கினார்.

மகள் மற்றும் இதர குடும்ப உறுப்பினர்களுடன் மன்மோகன் மகிழ்ச்சியாக இருந்தார். (ற)



திருச்சி அருகே செம்பட்டில் உள்ள பங்கீட்டுப் பொருட் களஞ்சியத்தில் ஏற்பட்ட மர்மத் தீ விபத்தில் அரிசி மூட்டைகள் எரிந்து சிதறிக்கிடக்கின்றன.

# இந்தியச் செய்திகள்



'பத்ம ஸ்ரீ லல்லுப் பிராத் யாதவ' எனும் ஹிந்திப் படத்திற்கான படப்பிடிப்பு பட்னாவில் உள்ள மத்திய ரயில்வே அமைச்சர் லல்லுப் பிரசாத் யாதவ் வீட்டில் நடைபெற்றது. இப்படத்தில் அவரே வசனம் பேசி நடிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பழைய படங்களின் பெயரில் புதுப்பட திருட்டு 'வீ.சீடிக்கள்!

## மூவர் பொலிஸாரால் கைது

பர்மா பஜார் கடைகளில் பதுக்கி வைத்திருந்த புதுப்பட திருட்டு வீ.சீடிக்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் நாடோடி, மதுமதி, மன்னாதி மன்னன் ஆகிய பழைய படங்களின் ஸ்டிக்கர்களை ஒட்டி புதுப்பட திருட்டு வீ.சீடிக்களை விற்றதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

திரைக்கு வந்த புதுப்படங்களின் திருட்டு வீ.சீடிக்கள் சில தினங்களுக்குள் சென்னை பர்மா பஜார் பகுதிக்கு விற்பனைக்கு வந்து விடுகின்றன. இதைத்தடுக்க வீடியோ தடுப்பு பிரிவு பொலிஸார் பல வழிகளிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதுபோன்று அப்பகுதி பொலிஸ் நிலைய அதிகாரிகளும் அதிரடி தேடுதல் நடத்தி வருகின்றனர்.

பர்மா பஜார் பகுதியில் புதுப் படங்களின் திருட்டு வீ.சீடிக்கள் விற்கப்படுவதாக வந்த தகவலின் பேரில் பூக்கடை துணைக் கமிஷினர் சேஷசாய் உத்தரவின் பேரில் உதவி கமிஷனர் பாலசுப்பிரமணியம், வடக்கு கடற்கரை இனஸ்ரெக்டர் அசோகன், எஸ். லக்ஷமனன் மற்றும் தனிப் படைப் பொலிஸார் தீன தயாளன, ரேஷ் ஆகியோர் கடந்த வெள்ளிக் கிழமை இரவு பர்மா பஜார் பகுதியில் அதிரடி சோதனை நடத்தினர்.

பர்மா பஜார் கடைகளில் சோதனையில் ஈடுபட்டபோது புதுப்படங்களின் திருட்டு வீ.சீடிக்கள் கஜேந்திரா செல்லமே, அரசாட்சி, வசூல் ராஜா எம்.பி.பி. எஸ்., மதுர போன்ற புதுப் படங்களில் திருட்டு வீ.சீடிக்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

இவற்றின் மதிப்பு ரூபா 50 ஆயிரம் ஆகும். இவை தவிர நாடோடி, மதுமதி, மன்னாதி மன்னன் ஆகிய பழைய படங்களின் வீ.சீடிக்களும் கண்டுபிடிபட்டன.

"விசாரணையில் இவை முறையே கஜேந்திரா, மதுர அரசாட்சி ஆகிய படங்கள் என்றும், பொலிஸாரிடம் பிடிபடாமல் தப்பிக்க பழைய பட ஸ்டிக்கர்களை ஒட்டி விற்றதும் தெரியவந்தது.

இத்திருட்டு வீ.சீடிக்களைப் பதுக்கி விற்பனையில் ஈடுபட்டு வந்த 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற)

## இன்று ஒரு தகவல்

# கால்பந்தாட்டக் கவலைகள்

ஒரு பெரிய மனிதன் ஒரு புட்பால் விளையாட்டுப் போட்டிக்குப் போனார். அவர் தான் அன்று முக்கிய விருந்தினர். ஜெயிப்பவர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டியவர். மிகவும் ஊக்கமாக விளையாட்டுப் போட்டியைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் போட்டியைப் பற்றிய உங்களுடைய அபிப பிராயம் என்ன? என்று அவரிடம் கேட்டார்கள் போட்டி ஏற்பாட்டாளர்கள். இதற்கு அவர் கொஞ்ச நேரம் தீரக கமாக யோசித்து விட்டுச் சொன்னார் "ஒரு பந்திற்காக எதற்கு இவ்வளவு பேர் அடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்? ஆளுக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுத்து விடலாம் என்பது தான் எனது அபிப்பிராயம் என்றார்.

நல்ல விபரமான ஆளைத்தான் பரிசளிக்க அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு விடயம் அவர் சொன்னதில் ஒன்று உண்மை. அதாவது ஒரு பந்துக்காக எல்லோரும் அடித்துக் கொண்டு நிற்கிறார்கள் என்று சொனனாரே அதுதான் இந்த விளையாட்டு விளையாட வேண்டுமென நினைத்தால் அடிபடுவதற்கும் காயம் வருவதற்கும்கவலைப்படக்கூடாது. அப்படிப்பட்ட விளை யாட்டு இது .வேடிக்கை பார்ப்பவர்களும் மிகவும் உணர்ச்சி வசப்படக் கூடிய விளையாட்டு இது.

புட்பால் விளையாடச் செல்பவர்களுக்குப் புத்தி சொல்வதென்றால் முழங்கால் கவனம், குதிக்கால் கவனம் என்று தான் சொல்வேண்டும். முழங்கால் நமது உடம்பில் முக்கியமான ஒரு பகுதி. அதை நாம் இயற்கையாகவே உபயோகப்படுத்த வேண்டுமென் றால் நீட்டலாம், மடக்கலாம் அவ்வளவுதான். ஒரு பக்கம் தான் நீட்ட முடியும் ஆனால் புட்பால் விளையாடுபவர்கள் இந்த முழங்காலை வேறு விதமாகவும் உப யோகப் படுத்தும் போது நிலைமை விபரீதமாகிவிடும். ஓடுவது திடீரென்று திரும்புவது முறுக்கிக் கொண்டு விழுவது வளைவது என்று பாவம் அந்த முழங்கால் எவ்வளவு தான் தாங்கும்.

பலவேளைகளில் ஒரு கால் பந்தை உதைக்கும போது உடல் எடை முழுவதையும் இன்னொரு கால் தான் தாங்க வேண்டி வரும் இதன்போது கொஞ்சம்தடுமாறினாலும் சிக்கல் தானே? விளையாடும் போது முழங்காலில் அடிப் பட்டதென்றால் முதலில் செய்ய வேண்டியது என்ன?

அடிபலமா, இலேசா என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அதை எப்படிக் கண்டுபிடிப்பது? **Sever einjury** என்றால் அதற்கு சில அடையாளங்கள்உண்டு. வீக்கம் வலி, மூட்டு பிசகிப் போதல, முழங்காலை நீட்ட முடியாது இருந்தால் அது **Major** இல் லாவிட்டால் அது **Minor** சாதாரண அடியென்றால் அதற்கு ஐஸ் ஒத்தடம் கொடுத்தால் போதும். அதன் பின்பு ஒரு **Knee cap** போட்டு மீண்டும் விளையாட விட்டுவிடலாம்.

அடி கடுமையாக இருந்தால் அவரைப் பேசாமல் தூக்கிக்கொண்டு ஒரு (**Sports Doctor**) இடம் போய் விடவேண்டியதுதான். தசை சிதைந்து போய் இருக்கிறது என்பதற்கு வலி ஓர் அடையாளம். வலித்தால் ஓய்வு எடுத்துக்கொள் என்று உடல் சொல்வதாக அர்த்தம். அந்த சமயத்தில் அதைப் புரிந்து கொள்ளாமல் சும்மா வலியை மறப்பதற்கு என்று ஏதாவது மருந்து போட்டுக்கொண்டு மீண்டும் விளை யாட்டில் இறங்கனால் அது இடைஞ்சலில் கொண்டு வந்து விடும். காயம் பெரிதாகி விடும்.

**Anthroscopic Surgery** இப்போது மிகவும் முனணேறியுள்ளது. டாக்டர் என்ன செய்வாரென்றால் ஒரு சிறிய டெலஸ்கோப்பை முழங்கால் மூட்டிற்குள் செலுத்துகிறார். அந்த இடத்தில் வலி மறப்பு மருந்து போட்டு விட்டு ஒரு **T.V.Monitor** இல் பார்க்கிறார். என்ன கோளாறு என்று புரிகிறது.

ஒரு சத்திர சிகிச்சை செய்து பார்க்க வேண்டும் என்பதை சுலபமாக தொலைக்காட்சியில் படம் பார்ப் பது போல பார்த்துவிடுவார். சில உபகரணங்களை இன்னொரு குழாயின மூலமாக உள்ளே செலுத்தி சிதைவுகளை சரிசெய்துவிடுவார். தையல் இல்லை. இரததம் இல்லை, பிளாஸ்டர் இல்லை. ஆஸ்பத்திரி யில் ஊஞ்சல் கட்டிவிட்டு அதையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. சீக்கிரம் குணம் ஆகி விடும். கொஞ்ச நாளில் மீண்டும் பந்து உடைக் கப்போய்விடலாம்.

ஒருவர் புட்பால் விளையாட்டினால் அவரது காலில் சுளுக்கு விழுந்துவிட்டது. கொஞ்சநாள் கழித்து அவரை ஒருவர் சந்தித்தார். 'என்ன சார் சுளுக்கிற்கு என்ன செய்தீர்கள்?' என்றாார். ஒத்தடம் கொடுத்தால் சரியாகி விடும் என்று சிலர் சொன்னார்கள் செய்து பார்த்தேன் சரிவரவில்லை. பச்சிலை தடவினால் சரிவரும என்று சிலர் சொன்னார்கள். செய்து பார்த்தேன் சரிவர வில்லை.

அதன்பின் மருந்து தடவினேன், மாத்திரை சாப்பிட்டேன் எதுவும் சரிவரவில்லை. கடைசியில் கோபத்தில் காலை உதறினேன் சரியாகி விட்டது. என்றார். "பலே ஆள் சார் நீங்கள். அதுசரி அதன்பின்னும் ஏன் காலை இழுத்து இழுத்து நடக்கிறீர்கள்?" என்று கேட்டார். "இது வரையில் நான் சொல்லிக்கொண்டு வந்தது இடது காலுககு சார். வலது கால் சுளுக்கு அப்படியேதான் இருககிறது. அதுதான் இழுத்துக்கொண்டு நடக்கின்றேன்". என்று கூறிவிட்டு அது போவவே நடந்து போய்க் கொண்டிருந்தார் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## கொலன்னாவே சுமங்களதேரர் வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவே சுமங்களதேரர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள சமூகத்தின் நன்மைக்காக இரு அரசியல் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்படுவது அவசியமானது என சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கொலன்னாவே சுமங்களதேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தனர். இவ்வாறு தேரர் தெரிவித்தஉடனேயே இவ்விருவரும் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்து விட்டனர்.

இந்நிகழ்வில் அமரபுர மகாநாயக்க தேரரின் சிலையும் திறந்து வைக்கப்பட்டது. தேரரின் உருவச் சிலைக்கான திரைச்சீலையைப் பிரதமர் ராஜபக்ஷவும் ரணில் விக்கிரம சிங்கவும் திரைநீக்கம் செய்து வைத்தனர். அதன்போது, அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இருபக்கமும் எதிர்த்து இழுப்பது போலவே இதுவும் என பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ நகைச்சுவையாகத் தெரிவித்தார்.

பின்னர் இரு தலைவர்களுக்கும் தனித்தனியாக தேரர் ஆசி வழங்கினார். ஆனால் இருவருமே இந்நிகழ்வில் உரையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரு-6)

# போராட்டத்தின் வளர்ச்சி மாற்றங்களை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்கிறது

## கலைவிழி உரை

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்டினன் கேணல் திலீபனின் 17ஆம ஆண்டு நினைவுதின யாழ். பல்கலைக்கழகத்தின் விசேட நிகழ்வுகள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளா கலைவிழி,பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் உரையாற்றுகையில்,

திலீபன் அண்ணா இந்த யாழ்.மண்ணில் எதையெல்லாம் மாற்ற நினைத்தாரோ அந்த மாற்றங்கள் எல்லாம் நடந்துள்ளன.

இம் மாற்றங்களையெல்லாம் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

அதுவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பின்னால் தமிழ் மக்கள் நிற்கின்றனர். அதை சர்வதேச சமூகம் கவனமாகப பார்த்துக்கொண்டிருக்கின்றது.

எதை தமிழ் மக்கள் விரும்புகின்றார்களே அதையே விடுதலைப்புலிகள் செய்கின்றனர் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது. எங்களது போராட்டத்தைத் திசை திருப்ப எதிரியும்,சர்வதேச சமூகமும் முனைந்து செயற்படுகின்றது.

ஆனால் நாங்கள் ஆயிரம் ஆயிரம் போராளிகளை இந்த மணணுக்காக இழந்திருக்கின்றோம். எமது நோக்கத்தை எதிரியோ சர்வதேச சமூகமோ திசை திருப்ப முடியாது என்பதை நான் இந்த திலீபனின் நாளில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார். (ரு-5)

# இராசி பலன்

**27.09.2004 (புரட்டாதி11திங்கட்கிழமை)**
**சதுர்த்தசி முன்னிரவு 08.20மணிவரை**
**புரட்டாதி பி.ப. 4.53 மணிவரை**
**இராகுகாலம் 7.32-9.02 மணிவரை**
**சுப நேரம் 12.02- 1.32 மணிவரை**
**நடேசரபிசேகம்**

**மேடம்**
பெரியோர் மதிப்பு, களஸ்திர நன்மை, தெய்வசிந்தை, காரிய அனுகூலம்.

**இடபம்**
அதிகாரம் நல்ல பிரயாசை, விருந்துபசாரம், உற் சாகம்.

**மிதுனம்**
புதிய திட்டமிடல், வீண்பயம், இடமாற்றம், காரிய தாமதம்.

**கடகம்**
நண்பர்கள் விரோதம், பணத்தட்டுப்பாடு, வாகன பயம், தொழிலில் மந்தநிலை.

**சிங்கம்**
நல்ல வரவேற்பு, பணவசதி, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி.

**கன்னி**
சுவாரஸ்யம், அறிஞர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி.

**துலாம்**
வியாபாரநன்மை, கௌரவக்குறைவு, பூர்வ புண்ணிய கருமம், சிறுவியாதி.

**விருச்சிகம்**
மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், காரியதாமதம், உடல்நலக்குறைவு.

**தனுசு**
பெருமையடைதல், தெய்வ சிந்தை, பணபழக்கம், காரிய சித்தி.

**மகரம்**
காரியதாமதம், வீண் பிணக்கு, பணக் குறைவு, தெய்வசிந்தை.

**கும்பம்**
தெய்வதரிசனம், புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன நன்மை.

**மீனம்**
அமைதிக்குறைவு காரிய அலைச்சல், பண விரயம், உடல் நலக்குறைவு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது-வளவன்

# சமாதானத்தை வலியுறுத்தி மன்னாரில் அமைதிப் பேரணி

(மன்னார்)

சமாதானத்ததை வலியுறுத்தி சர்வமத சமாதான அமைதிப்பேரணி நேற்று முன்தினம் மன்னாரில் இடம்பெற்றது.

மனனார் புனித செபஸ்தியான் பேராலயத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்தப்பேரணி இந்து முஸ்லிம் பிரதான வணக்க ஸ்தலங்கள் ஊடாக சென்று மன்னார் பொது விளையாட்டரங்கை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்படவிருந்த மகஜர்கள் வாசிக்கப்பட்டன.

அத்துடன் சமாதானம் தொடர்பான கருத்தரங்குகள் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

மன்னார் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் அரச அதிபர்கள், மும்மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-61)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் மாசார் அ.த.கலவன் பாடசாலை

(மருதங்கேணி)

மருதங்கேணி சந்தியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எந்த ஒரு அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருகிறது.

இப்பகுதியில் 3வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் மீளக்குடியேற ஆரம்பித்துவிட்டனர்.ஆனால்,2002ஆம் ஆண்டு இப் பாடசாலை புனரமைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் விமானக்குண்டு வீச்சாலும், எறிகணை வீச்சாலும நிரந்தரக்கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டது. இப் பகுதியில் மீளக்குடியமர்வின் பின் ஒரு தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு அதிலேயே இப்பாடசாலை இயங்கத் தொடங்கி இரண்டு வருடங்களாகியுள்ள நிலையில் இதன் கூரைகள் காற்றினால் அனைத்தும் எடுத்துச்செல்லப்பட்டதோடு நிலமும் புழுதியாகக் காணப்படுகிறது.

மழைக்காலத்தில் இங்கு கல்விச்செயற்பாடுகள் கேள்விக்குறியானதாகவுள்ளது.இங்கு தரம்1இலிருந்து தரம்11 வரையான வகுப்புக்களில் 325ற்கு மேற்பட்ட மாணவாகள கல்வி கற்கினறனர்.

தற்கால கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக கல்விச் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளமுடியாதுள்ளதாகவும் அப்பகுதி கல்விச் சமூகத்தினர் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், விளையாடடு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதானமோ இல்லாத நிலையில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மலசலகூடவசதியும் குறைவாகவே உள்ளது.

பின்தங்கிக் காணப்படும் இக்கிராமம் மேலும் பின் தங்கிச் செல்லும அபாய நிலை தோன்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அரச திணைக்களங்களோ துறைசார் திணைக்களங்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ அக்கறை கொள்ளாதுள்ளதால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் வறுமையை எதிர்நோக்கியுள்ளனா.

இப்பகுதி பின்தங்கிய கிராமமாதலால் அரச திணைக்களங்கள் அக்கறை காட்டாது இருக்கின்றன என அப்பகுதி கல்விச் சமூகம் விசனம் தெரிவிக்கின்றது.

அத்துடன் இப்பகுதி மாணவர்களின் கல்வி அபிவிருத்தியைக் கவனத்தில் எடுத்து இப்பாடசாலைக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர். (ரு-35)

# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்...

# தேர்த்திருவிழாச் சிறப்...



பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக் குருக்கள்

## பிரதான குருமார்களின் ஆசியுரை



பிரம்மஸ்ரீ.ச.க.புருஷோத்தமக் குருக்கள்

தாரண வருஷ மஹோற்சவம

**ஸ்ரீமத் பகவத்கீதை. சுலோ .29**

ஸமோ அஹம் ஸர்வபு,தேஷ நமேதீ வேஷ்யோ அஸ்தி நப்ரிய!
பஜந்தி துமாம் பக்தியா மயிதே தேஷீ சாப்ய ஹம்!!.29

**பொருள்:** நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாயிருக்கிறேன். எனக்கு பகைவனுமில்லை, நண்பனுமில்லை. ஆனால் என்னைப் பக்தியோடு பூஜிக்கிறவர்கள் என்பால் உளர். நானும் அவர்கள் பால் உள்ளேன! ராஜவித்யாராஜ குஹய யோகம்.!!


***வல்லிபுர -மாயவன் மெய்யடியார்களே!***


**வல்லிபுர மாயவனின் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 13ந் திகதி திங்கட் கிழமை (13.09.2004) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இனதே நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் (27.09.2004) திங்கட்கிழமை மகோற்சவததின் முக்கியமான அஙகமான இரதோற்சவம் நடைபெறும் சங்கார மூர்த்தியாக சக்கர மாயவன் தேரேறி வீதிவலம் வநது கொடிய ஆணவ மலத்தைப் போககயருளுவார். ஆனமாககளைப் பீடித்தருக்கும் ஆணவமலம் நீங்கப்படுவதால் மக்கள் ஆனந்தமடைகின்றனர். இன்றைய தினம் மிகவும் பெறுமதி வாய்ந்த புண்ணியதினமாகும். தேரில் உலா வரும் மாயவனைத் தரிசிக்கும் அடியவர்களுக்குப பகவான் பலகோடி நன்மைகளை வாரி வழங்குவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவனருளாலே அவன் தாள்பணிநது மாயவனது அருளாசிகளைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகினறோம்.**

**சுபம்**

**பிரம்மஸ்ரீ. ச.க.சுதர்சனக் குருக்கள்**
**பிரம்மஸ்ரீ. ச.க.புருஷோத்தமக் குருக்கள்**
**பிரதான குருமார்கள்**

**ஸ்ரீஆழ்வார் பீடம்,**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,**
**துன்னாலை, புலோலி.**





**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய ...**



வல்லிபுர ஆழ்வார் வரலாறுகள் பல கூறப்படுகின்றன. செவி வழிவந்த வரலாறாக ஒரு வரலாறு தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது.

துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவிலே வல்லியெனும் பெயருடைய பெண் ஒருத்தி வாழ்ந்த இடமே வல்லிபுரம் ஆயிற்று. வங்கக் கடலில் பெரும் இரைச்சலும் ஓங்கி எழும் அலையானது மாறிமாறி வடமராட்சியின் கிழக்குப் பகுதியை அணைத்துச் செல்வது இன்றும் நடக்கும் காட்சியாகும்.

அன்றொருநாள் மச்ச அவதாரம் எடுத்த விஷ்ணுமூர்த்தி அந்த நாள் ஞாபகம் மிதுர மீனாக வந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களின் மனங்களை கிலேசமடையச் செய்தான். அந்த மீன் வலைகளைக் கிழித்து துள்ளிக்குதித்து அங்கும் இங்கும் பாய்ந்துகொண்டிருந்தது. இந்த அற்புதத்தைக் கேள்வியுற்ற கரையோரப் பகுதியில் வாழ்ந்த மீன்வ மக்கள் அனைவரும் கடற்கரையில் கூடினார்கள். மீனின் லீலைகளைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

நீண்டநாள்களாக வல்லிக்கு ஒரு மனப்புகைச்சல் இருந்தது. மனதிலே நீங்காத வடுவாக ஊரவர்கள் தன்னை மலடி என்று அழைக்கத்தக்கதாக எனக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லையே என அருந்தவம் அரிது முயன்று வந்தாள். தன்னை நம்பிவரும் அடியவர் துயர்களையும் நீள் கடலில் அள்ளிக் கொள்ளும் அனந்தசயனமூர்த்தி அர்த்த ராத்திரியில் வல்லியின் கனவிலே தோன்றி ''அலைகடலோரம் வரின் மன உழைச்சல் நீங்கும்'' என்று பணித்து மறைந்தான்.

வல்லியின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனின் அற்புதத்தை காண வல்லியும் கடலோரம் வந்


**துளசி வீடியோ ஓடியோ சென்ரர்**
சந்தை முன்பாக
சாவகக்சேரி வீதி, மந்திகை.
வீடியோ ஓடியோ CDமூலம் றெககோடிங் செய்திட. புதிய பழைய பாடல்கள் CDயில் இருந்து நேரடியாகப் பதிவு செய்திட.
மற்றும் படக்கசறடுக்கள் V.C.D வாடகைக்குப் பெற்றிட நாடுங்கள்.

**பிரியங்கா உணவகம்**
சிறந்த முறையில்
சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட சற்றுண்டி
வகைகளை பெற்று உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்.

**V.K தொலைத்.தொடர்பகம்**
துன்னாலை
எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு
தொலைத்தொடர்பு சேவை 24
மணிநேரமும் இடம்பெறுகின்றது.
அத்துடன் வெளிநாட்டு நாணயம்
மாற்றிக் கொடுக்கப்படும்.
மற்றும் ஆட்டோ வாகனசேவை
கிற்காட்டுகளும் பெற்றுக்கொள்ளலாம.
தொடர்பு கொள்ளவேண்டிய தொ.இல
021 226 3589
0777 49 7026

**விநாயகர் களஞ்சியம்**
பிரதான வீதி, மருதடி,
பருத்தித்துறை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
தரமான பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்
கொள்ளலாம்.

**ராஜ் வர்த்தக நலையம்**
பிரதானவீதி. நெல்லியடி.
எம்மிடம் பலசரக்குப் பொருட்கள், கால்நடைத் தீவனங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பிறிமா மாஸ்வகைகள் கம்பனி விலையில பெற்றுக்கொள்ளலாம்.

**கிருஷ்ணா லோண்றி**
* கொடிகாமவீதி, சாமியன் அரசடி.
* பருத்தித்துறை வீதி மாலிசந்தி.
மணமகனுக்குரிய தலைப்பா, கோட்சூட் வாடகைக்கு விடபபடும்.

**லவ்லி கூல்பார்**
பிரதான வீதி, நெல்லியடி.
சகலவிதமான உணவு
வகைகளையும்
சிறந்தமுறையில்
ஒரேயிடத்தில பெற்றிட
நீங்கள் நாடுவது

**வரதன் ஆட்ஸ்**
சண்டில் வீதி, கரவெட்டி மேற்கு.
கரவெட்டி.
வீடுகள், கோயில்கள், கட்டிடங்கள் போன்றவற்றிக்கு வர்ணம் பூசி அழகுறச் செய்யவேண்டுமா? உடன்நாடுங்கள்.

**கஜமுகன் பல்பொருள் வாணிபம்**
தாமரைக் குளத்தடி,
துன்னாலை

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**கணிதம் I**

**மணி - 1**


ஆக்கம் :
*சி. டியூக் பல்குணன் லாலா*
யா/ மல்லாகம் மகாவித்தியாலயம், மல்லாகம்.


**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

1. ஒரு முட்டை வைக்கும் தட்டில் 40முட்டைகள் வைக்கலாம். 6தட்டுகளில் எத்தனை டசின் முட்டைகள் வைக்கலாம்?

2. இந்த எண்கோலத்தில் அடுத்த இரு உறுப்புகளை எழுதுக.
48,24,12,6,3,--,--

3. **y=2x, Y=x** ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளியின் ஆள் கூறுகளைத் தருக.

4. 
நான்கு மேசைகளை வரிசையாக அடுக்கி அவற்றைச் சுற்றி 10பேர் உட்கார்ந்து உணவருந்தலாம். இவ்வாறு அருகருகே மேசைகளை அடுக்கி 24பேர் உணவருந்த எத்தனை மேசைகள் தேவை?

5. 

Aஇலிருந்து Bஇன் திசைகோள் $070^0$, Bஇலிருந்து Aஇன் திசைகோள் யாது?

6. சுருக்குக: $49 \div 0.7$


7. தீர்க்க: $\frac{7}{8} = \frac{49}{Y}$

8. ஒருவன்(6,4)என்ற புள்ளியிலிருந்து புறப்பட்டு வடகிழக்குத் திசையில் நடந்து(**t**,9) என்ற புள்ளியை அடைந்தான். **t** இன் பெறுமானம் யாது?

9. **1Cm** ஆல் **10m** குறிக்கப்படும் அளவிவிடையில் வரையப்பட்ட படத்தில் $7Cm^2$ பரப்பளவு உண்மையில் எத்தனை $m^2$ ஐக் குறிக்கும்?


10. இரு வட்டங்களின் மையங்கள் **18Cm** இடைத்தூரத்திலுள்ளன. வட்ட மையங்களின் ஆரைகள் **3Cm,5Cm** ஆகும். வட்டங்களின் பரிதிகளில் உள்ள இரு புள்ளிகளின் மிகக் குறைந்த இடைத்தூரம் யாது?

11. ஒழுங்கான பல்கோணியொன்றின் சுற்றளவு 84 **Cm**. அதன் ஒருபக்க நீளம் **7Cm**. அதன் ஒரு புறக்கோணத்தின் அளவு யாது?

12. 


**AB=3Cm, BC=6Cm, CD=2Cm, DE=11Cm.**
$A\hat{B}C = C\hat{D}E = 90^0$
(அ) **AC** இன் நீளத்தைச் சேடு வடிவில் தருக.
(ஆ) **AE** இன் நீளத்தைச் சேடு வடிவில் தருக.

**13.** உருளை **A**இன் குறுக்கு வெட்டுமுக ஆரை **rCm**, உயரம் **hCm** எனின் அதன் கனவளவு $v\ Cm^3$ ஆனது.$v= r^2h$ ஆல் தரப்படும்.
இந்த உருளையைப் போல இருமடங்கு நீளமான ஆரையும், அரைப்பங்கு உயரமுடைய உருளை **B**இன் கனவளவு **A** இனதைப் போல எத்தனை மடங்காகும்?

14. 

செவ்வகக் கனவுரு **ABCDEFGH** இல் **AB=4Cm**
**AE=3Cm, BC=5Cm** எனின்
(அ) **HC** இன் நீளம் யாது?
(ஆ) $B\hat{H}C$ இன் அளவு யாது?

15. வியாபாரி ரூ 4325 இற்கு வாங்கிய பொருளை விற்று கொள்விலையின் $\frac{2}{5}$ பங்கினை இலாபமாகப் பெற்றால் சதவீத இலாபம் யாது?

16. 

வீடுகளில் உபயோகிக்கப்பட்ட மின்சக்தியை **kwh** இல் அளக்கும் பழைய வகைக் கருவி படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் வாசிப்பினைக் கட்டிய முழுவெண்ணில் தருக.


17. $\textbf{Sin Q} = \frac{5}{13}$ எனின் **tan Q** ஐக் காண்க.

18. **6Cm** ஆரையுடைய உலோகக் கோளம் ஒன்றினை உருக்கி அடிவட்ட ஆரை **ʒCm** உம் உயரம் **6Cm** உம் உள்ள கூம்புகள் எத்தனை செய்யலாம்?

19. $C+\frac{1}{C}=3$ எனின் $C^2+\frac{1}{C^2}$ இன் பெறுமதியைக் காண்க.

20. $2^{-3}$இனைத் தசம எண்ணாகத் தருக.


21. நகரங்கள் **A,B** என்பவற்றினடைத்தூரம் 240**Km.** ஒருவன் **A** இலிருந்து **B** இற்கு $40Kmh^{-1}$ கதியிலும், மீண்டும் **B** இலிருந்து **A** இற்கு $60Kmh^{-1}$ கதியிலும் பிரயாணம் செய்தால் அவனது சராசரிக் க்தி யாது?


22. 


செவ்வகம் **ABCD** இல் பக்கம் **AB** ஆனது **E** வரை நீட்டப்பட்டுள்ளது. **AB=12Cm,BC=4Cm** △ **CDE** இன் பிரப்பள்வு யாது?

23. $\ell g\ 2=0.301$, $\ell g\ 3=0.477$ எனின்
(அ) $\ell g\ 5$ (அ) $\ell g\ 6$ என்பவற்றைக் காண்க

24. நான்கு பூசினிக்காய்களின் நிறைகளின் ஆகாராம் 9**Kg**. அவற்றின் இடை நிறை 10**Kg**. மிகப் பெரிய காயின் நிறை 15**Kg** எனின்.

25. **O**இனை மையமாகவுடைய வட்டத்தின் பரிதியில் **A**என்பது நிலையான ஒரு புள்ளி. 13 என்பது பரிதியில் உள்ள மாறும் புள்ளி.
வட்டமையம் **o** இலிருந்து நாண் **AB**இற்கு வரையப்பட்ட செவ்வன் **AX**எனின், **B**இன் வெவ்வேறு நிலைகளுக்கு புள்ளி**X**இன் ஒழுக்கு யாது?




26. நீளம் 9**Cm**, அகலம் 4**Cm** ஆகவுள்ள செவ்வக அட்டையிலிருந்து வெட்டியெடுக்கக் கூடிய மிகப் பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?



27. 

**ABC**இல் $A\hat{B}C, A\hat{C}B$ என்பவற்றின் இரு கூறாக்கிகள் **O**இல் சந்திக்கின்றன.
$B\hat{O}C=110^0$ எனின்
(அ)**x+y**ஐகாண்க
(ஆ)**2x+2y**ஐ காண்க
(இ)**BAC** இன் அளவு யாது

28. திண்மக் கோளம் ஒன்றின் மேற்பரப்பளவு 90ஊஅ2. அதனை இரு பாதிகளாக வெட்டினால் கிடைக்கும் ஒரு பாதியின் மேற்பரப்பளவு யாது?

29. $\frac{2^6 \ x3^5}{3^x \times 2^y} = 2^4x3^7$ எனின்
(அ)**x** இன் பெறுமானம் யாது?
(ஆ)**y** இன் பெறுமானம் யாது?

30. 

மேலேயுள்ள கோலம் தீக்குச்சுகளினால் ஆக்கப்பட்டது
(அ)நாலாவது உருவிற்கு எத்தனை குச்சுள் தேவை?
(ஆ)20ஆம் உருவிற்கு எத்தனை குச்சுகள் தேவை?
(இ)ஒஆம் உருவிற்கு எத்தனை குச்சுகள் தேவை?

**நாளை கணிதம் மாதிரிப்பரீட்சை வினாத்தாள் - II வெளிவரும்**

# சிறுவர், பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களும்
# அவற்றிற்கு எதிரான சட்டங்களும்

**யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபத்தில் 19.09.2004இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இடம் பெயர்ந்தோர் நலன் பேணும் பிரிவின் ஏற்பாட்டில் நடாத்தப் பட்ட உலக சிறுவர் தினக் கொண்டாட் டத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி கௌரவ இ. த. விக்னராஜா ஆற்றிய உரையின் நேற்றைய தொடர்ச்சி**



**04)பிரிவு 345:-**
**(SEXUAL HARASSMENT)**

கணிசமான அளவு முக்கியத்துவம் பெறக்கூடிய திருத்தம் இப் பிரிவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப் பிரிவு குற்றமுறையான வன்முறைத் தாக்குதல் அல்லது ஒரு பெண்ணை அவளை மானபங்கம் செயயும் உள கருத்துடன் குற்றமுறையான வலோத்காரம் புரிதல் என்பதுடன் தொடாபுடையது. ஒருவர் பாலியல் ரீதியிலான தொந்தரவினை இன்னொருவருக்குச் செய்தல் அவ்வாறு தான் மற்றவரிடம் அவரை நோக்கி பாலியல் ரீதியில் சினமடைய வைக்கும் விதமாக நடந்து கொள்வதன் மூலம் அந்நபர் பாலியல் இம்சைக் குற்றம் புரிந்தவர் ஆவார். இக்குற்றத்திற்கு 5 வருடங்களுக்கு நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனையும், அல்லது தண்டப் பணமும் அல்லது சிறைத் தண்டனையும தண்டப்பணமும் அத்துடன் நீதிமன்று தேவை எனக் கருதினால் பாதிக்கப்பட்டவருக்கு நீதிமன்று நிர்ணயிககும் தொகையைக் குற்றம் சாட்டப்பட்டவர் நட்டஈடாக செலுத்த வேணடும். எனவும் தீர்ப்பு அளிக்க முடியும்.

**05) (அ) பிரிவு 360 (A)**

கூட்டிக் கொடுத்தல் (**Offence of Procuration**) குற்றத்துடன் தொடர்புடைய இப் பிரிவு பாலியல் துஷ்பிரயோகம் (**Sexual abuse**), சிறுவர் விபச்சாரம்(**child prostitution**), விலை மாதர் இல்லம் (**Brothels**) ஆகிய குற்றங்கள் தொடர்பான பிரிவாக அகலமாக்கப்பட்டுள்ளது.

**(ஆ) பிரிவு 360 (B) :-**

சிறுவர் விபச்சாரக் குற்றம் (**Child prostitution**)

**(இ) பிரிவு 360 (C) :-**

சிறுவர் வியாபாரம் (**Child Trafficking**)

குறித்த சிறுவர் விபச்சாரக் குற்றம், சிறுவர் வியாபாரம் தொடர்பான இப் பிரிவுகள் இரண்டும் இன்று இடம்பெறும் மகவேற்பு சம்பந்தமான பல்வேறு தகாத நடவடிக்கைகள் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் கையாளப்பட முடியும். இப்பிரிவுகளில் சிறுவர் என்ற சொல் 18 வயதிற்குடபட்டவர்கள் அனைவரையும் உள்ளடககும என்பது நோக்கற்பாலது . அத்துடன், இப் பிரிவுகளின் கீழ் விபரிக்கப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 05 வருடங்களுக்குக் குறையாத 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும், அத்துடன் தண்டப் பணமும் விதிக்கப்படலாம். என்பது நோக்கற் பாலது.

**06. பிரிவு 363 : பாலியல் வல்லுறவு**
**(Rape)**

நடைமுறையில் இருந்த பாலியல் வல்லுறவு சம்பந்தப்பட்ட இப் பிரிவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததிருத்தம் தற்போது செய்யப்பட்டுள்ளது. இப் பிரிவில் 05 வகையான அம்சங்கள் விபரிக்கப்பட்டுள்ள போதிலும் சிறுவர்கள தொடர்பாக 05 வது அம்சத்தில் விபரிக்கப்பட்ட விடயம் முக்கிய மானது. அதா வது, சம்மதம் இருந்தோ அல்லது சம் மதம் இல்லாமலோ அப்பெண் 16 வய திற்கு குறைந்தவளாக இருக்கும் போது என்பதுடன், குறித்த பிரிவின் கீழ் உள்ள விளக்க குறிப்பில் 16 வயதிற்கு குறைந்த சிறுமி பாலி யல் வல்லுறவுக்கு உட்படுத் தப் பட் போது, அதை அச்சிறுமி எதிர்த்தது, தடுத்தது தொடர்பாக உடல்காயம் இருக்க வேண்டும் என்பது தொடர்பான சாட்சியம் அவசியம் இல்லை என அப் பிரிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 364 இல் செய்யப்பட்ட புதிய திருத்தத்தின் படி பாலியல் வல்லுறவு குற்றத்திற்கு 07 வருடத்திற்கு குறை யாமலும் 20 வருடங்களுக்கு மேற்படாம லும் சிறைத் தண்டணை வழங்கப்பட லாம். என்பதுடன் அத்துடன் தண்டப்பணமும் விதிக்கப்படலாம். என்று மேலதிக மாக நீதிமன்று தேவை என கருதின் நீதிமன்றினால் நிர்ணயிக்கப்படும் கணிசமான தொகையை நட்டஈடாக குற்றம் சாட்டப்பட்ட வரால் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும். என்றும் தீர்ப்பளிக்கப்படலாம். இப்பிரிவில் இன்னொரு முக்கிய அம்சமும் காணப்படுகின்றது. அதாவது, பாலியல் உறவு குற்றச் சாட்டில் பாதிக்கப்பட்டவர் (**Victim**) **16** வயதிற்கு கீழ்ப்பட்டவராகவும், குற்றம் புரிந்தவர் (**Offender**) 18 வயதிற்கு கீழ்ப் பட்டவராகவும் இருந்து பாதிக்கப்பட்டவரின் சம்மதத்துடன் பாலியல் உறவு நடந்தாலும் திருத்தப்பட்ட பிரிவு 364 இன் பிரகாரம் குற்றம் புரிந்தவருக்கு 10 வருடங்களுக்குக் குறை ந்ததான சிறைத் தண்டணை வழங்கப்படலாம் என விதிக்கப்பட்டுள்ளது முக்கியமான அம்சமாகும்.

**07) பிரிவு 364 (A)**

தடுக்கப்பட்ட தகாத உறவு முறைக்குள்ளான பாலியல் தொடர்பு குற்றம் (**Offence of Incest**)

இப்பிரிவின் சிறப்பு அம்சம் கீழத்தேய நாகரிகத்தின் சிறந்த பண்பாடாக பேணப்படும் இரத்த உறவு தொடர்பான தாகும் என கொள்ளலாம். முக்கிய மான இப்பிரிவில் கீழத்தேய நாகரிகத் தின் இரத்த உறவு முறையில் ஏற்றுக் கொள்ளப்படாத திருமணப்பந்தங்கள் சம்பந்தப்பட்டதுடன் மகவேற்பு முறையின் மகவேற்புக்கு சம்பந்தப்படும் சிறுவனின் அல்லது சிறுமியின்- சட்டபூர்வமான தாய், தந்தை,சகோதர,சகோதரிகள் சம்பந்தமான இரத்த உறவுமுறைகளையும் இப் பிரிவில் அடக்கியுள்ளது என்பது சிறப்பம்சமாகும். இப்பிரிவு தன்மட்டில் இப் பிரிவில் கணக்கிடப்பட்ட ஏதாவது அந்தஸ்த்து முறையிலான உறவுமுறை கொண்டுளளவருடன் பாலியல் தொடர்பு வைத்திருப்பின் இந் நபர் தடுக்கப்பட்டதகாத உறவு முறைக்கு உள்ளான பாலியல் தொடர்பு குற்றம் புரிந்தவராவார்.

இக்குற்றத்திற்கு 7வருடங்களுக்குக் குறையாத 20வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் அல்லது குறித்த சிறைத்தண்டனையுடன் தண்டப்பணமும் விதிக்கப்பட முடியும்.

இக்குற்றச்சாட்டின் பாரதூரத் தன்மையை சட்டவாக்கத்துறையினர் கவனத்தில் கொண்டு இப்பிரிவின் கீழ் ஒரு நபருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்படுமுன் கௌரவ சட்டமா அதிபரின் எழுத்து மூல அங்கீகாரம் பெற்றே ஒருவருக்கு எதிராக இப்பிரிவின் கீழ் விபரிக்கப்பட்ட குறறமசாட்டப்படலாம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**08. (அ) பிரிவு 365 (A):-**

இரு நபர்களுக்கு இடையிலான பாலியல் தொடர்பிலான இழிவான செயல (**Acts of gross indecency between persons**)

**(ஆ) பிரிவு 365 (B):-**

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானது (**grave Sexual abuse**)இவ்வாறான குற்றம் 18வயதுக்கு குறைந்த சிறுவர் மது புரியப்பட்டால் குற்றம் புரிந்தவருக்கு 10வருடங்களுக்கு குறையாத 20வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்பட முடியும்.

**(இ) பிரிவு 365 (C):-**

இப்பிரிவு மேலே விபரிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான பாலியல் ரீதியிலான குற்றங்களால் பாதிக்கப்பட்ட சிறுவரை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட பிரிவு எனக் கொள்ள முடியும். ஏனெனில், பாலியல் இம்சை(**Sexual Harrassment**), கூட்டிக்கொடுத்தல்(**Offence of procuration**) சிறுவர் விபச்சாரக் குற்றம் (**Child Prostitution**), பாலியல் வல்லுறவு (**Rape**), தடுக்கப்பட்டதகாத உறவுமுறைக்குள்ளான பாலியல் தொடர்புக் குற்றம் (**Offence of Incest**), இழிவான செயல் (**Acts of gross indecency between persons**), பாலியல் துஷ்பிரயோகம் (**grave sexual abuse**), ஊனுறுப் புணர்ச்சி (**Carnal Intercourse**), ஆகியன குற்றச்சாட்டுக்கள் தொடர் பாக பாதிக்கப்பட்டவரின பெயரை அல் லது பாதிக்கப்பட்டவரை அடையாளம கண்டு கொள்ள வழிசமைக்கும் விடயத்தை எவராவது அச்சிடுதல் அல்லது வெளியி டுதல் குற்றமாகும் என இப்பிரிவு விபரித் துள்ளதுடன், இப்பிரிவுக்கு உள்ளான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் இரண்டு வருட சிறைத் தண்டனையும் அல்லது தண்டப் பணமும் அல்லது சிறைத்தணடனையும் தண்டப்பணமும் விதிக்கபபடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பிரிவு அண்மைக்காலத்தில் மேலே குறிப்பிட்ட குற்றங்களில் பாதிக்கப்பட்ட வர்களின் நலனைப்பேண வேண்டியவர்களால் பயன்படுத்த எதுவித முயற்சியும் எடுக்கப்படாதது விசனத்துக்குரியதா கும் என் கருதுகின்றேன்.

தண்டனைச் சட்டக்கோவை(திருத்த) சட்டம் இலக்கம் 29ஆண்டு 1998(**PENAL CODE AMENDMENT)ACT No**.29 **OF** 1998

பிரிவு 286 (**A**)இன் பிரகாரம் புகைப் படச் சுருளை கழுவுபவர் அல்லது திரையிடப்படும் சுருளை கையாளுபவர் அதில் சிறுவருடைய பாலியல் ரீதியிலான இழிவான செயல் அல்லது பாலியல் தொடர்பான துஷ்பிரயோகம் காணப்பட்டால் உடனடியாக அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அந்தவிடயத்தை அந் நபர் அறிவிக்க வேண்டும் என தேவைப் படுகின்றது. அவ்வாறு செய்த தவறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அந் நபருக்கு 2வருட சிறைத் தண்டனையும் தண்டப்பணமும அல்லது சிறைத் தண்டனையும் தண்டப் பணமும் விதிக்கப்படலாம் என்றும் குறித்துரைக்கின்றது.

குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை (திருத்த) சட்டம் இலக்கம் 28, ஆண்டு 1998(**CODE OF CRIMINAL PROCEDURE AMENDMENT)ACT No**.28 **OF** 1998

பிரிவு 43 **A** என்ற பிரிவு புதிதாகச் சேர்க்கபபட்டு குற்றவியல் நடவடிக்கை முறைக கோவையின் பிரிவு 36,37 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவருக்கு அப்பிரிவுகள் பெருநதாது என வலியுறுத்தியுள்ளது. அதாவது குறித்த பிரிவுகளின் பிரகாரம் பொலிஸாரினால் கைதுசெய்யப்படும் நபர் ஒருவர் 24 மணித்தியாலத்திற்குள் நீதவான் ஒருவர் முன் முற்படுத்தப்பட்டு நீதவானின் தீர்மானத்திற்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்படலாம். ஆனால் மேலே குறிப்பிட்ட பிரிவு **43A** யின் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றிச்சாட்டின் மீது நீதிவான் முன் முற்படுத்துவதாக பொலிஸ் அதியட்சகர் தரத்திற்குக் குறையாத பொலிஸ் அததியட்சகர் அல்லது அவர் சமுகமில்லாத சந்தர்ப்பத்தில் அவருடைய கடமையைப் புரியும் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகததினரால் ஒப்பமிடப்பட்ட அறிக்கை நீதவானுக்கு சமர்ப்பிக்கப்படும பட்சத்து சமபநதப்பட்ட நபர் சிறுவர் துஷ்பிரயோகம் குற்றச்சாட்டின் மீது முற்படுத்தப்பட்டுள்ளார் என பதையிட்டு முதல் தோற்றதில் நீதிவான் திருப்திப்படும் பட்சத்தில் அந் நபரை 3நாட்களுக்கு மேற்பாடாமல் மேலதிக வசாரணைக்காக பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தரவிட நீதிவானுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**02.பிரிவு 451**(**A**)சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்ட வழக்கு ஒன்றில் சம்பந்தபபட்ட பாதிக்கப்பட்ட சிறுவரை அச் சிறுவரின நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தகுதியான பாதுகாப்பு இல்லமாக நீதிமன்று கருதுமிடத்து அச் சிறுவரை அவ்விடத்தில் வழக்கு முடியும்வரை பாதுகாப்பாக வைத்திருக்க நீதிபதி கட்டளையிட முடியும்.

**03.பிரிவு 453** (**A**) நீதிமன்றத்தை சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளுக்கு நீதிமன்றம் நாளாந்த நடவடிக்கைகளில் முன்னுரிமை கொடுக்க தேவைப்படுத்துகின்றது.

சான்றுக்கட்டளை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இலக்கம் 32,ஆண்டு 1999, (**EVIDENCE SPECIAL PROVISIONS) ACT No**.32 **of** 1999

சான்றுக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2(1)இன் பிரகாரம் தேவைப்பாட்டிற்கு அமைய ஒரு சிறுவர் சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்கக் கூடியவர் என்பதையிட்டு நீதிபதி திருப்திப்பட்டால் சாதாரணமாக ஒரு சாட்சி நீதிமன்றில் சாட்சியமளிக்க முன் மன்றுக்கு செய்யும் சத்தியம் அல்லது உறுதிமொழி இல்லாமலேயே குறித்த சிறுவரின் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கு நீதிபதிக்கு அதிகாரம வழங்கப்பட்டுள்ளது.

**02.பிரிவு 38** (**A**)இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரினால் வழங்கப்பட்ட நீதிமன்றில் சமுகமளித்தவரின் வயது தொடர்பான பத்திரம் நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ள முடியுமென குறிப்பிடுகின்றது.

**03.பிரிவு 163** (**A**)பிரகாரம் 18வயதுக்குக் குறைந்த ஒரு சிறுவன், சிறுவர் துஷபிரயோகம் தொடர்பான சம்பவம் பற்றி அச் சிறுவனுக்கும் ஒரு நபருக்குமிடையில் இடம் பெறும் சம்பாசனை வீடியோவில் பதிவு செய்யப்பட்டால் அச் சிறுவனுடன் சம்பாசித்தவரால் அந்த வீடியோ ஒளிப்பதிவும் நீதிபதியின் அனுமதியுடன் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமுறை (திருத்த) சட்டம் இலக்கம்27,ஆண்டு 1998

(**JUDICATURE (AMENDMENT) ACT No**.27 **OF** 1998)

தண்டனைச் சட்டக்கோவையில் பிரிவு 363இன் கீழ் பாலியல் வல்லுறவு குற்றம் சிறுவர் மீது புரியப்பட்டால் அந்த வழக்கு நீதிவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணைக்கு உட்படுத்தாது நேரடியாகவே மேல் நீதிமன்றில் குற்றம் புரிந்தவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய வழிசமைத்துள்ளது. இத் திருத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவரின் நலனை கருதி காலதாமதமின்றி விரைவாக விளக்கம் நடைபெறவும் இரு வேறு நீதிமன்றங்களில் பாதிக்கப்பட்டவர் இருதடவைகள் வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கி அனுபவிக்கும் மன உளைச்சலைத் தவிர்ப்பதற்கும் இத் திருத்தம் வழி கோலியுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட சட்டத்திருத்தங்களின் பூரண பயனை பொதுவாக சமூகமும்,சிறப்பாக பெண்களும் சிறுவர்களும் பயன் பெறுவதற்கு இச் சட்ட திருத்தங்கள் சம்பந்தமான தெளிவையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவது 1998 ஆம் ஆண்டு 50ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் (**NATIONAL CHILD PRTECTION AUTHORITY ACT No**.50 **OF** 1998) கீழ் மாவட்ட ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குழுவின் இன்றியமையாத கடமை என நான் கருதுகின்றேன். ஏனெனில் குறித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின்

பிரிவு 14(ஈ)

இன் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பதற்கு அவர்களுக்குள்ள உரிமை, சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதை தடுப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.


பிரிவு(எ) இன் பிரகாரம் எல்லா விதமான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் நடைமுறை படுத்துவதைக் கண்காணித்தல்,

(...பக்கம் பார்க்க)

# ழ்வார் சுவாமி கோவில்

# பு மலர் - 27.09.2004






## தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஒரு ஆலயத்தின் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருக்கோலததைப் பொறுத்து உற்சவங்கள் இடம்பெறும். வலலிபுர சேத்திரத்தில் நாராயணனின் திருவிளையாடல்கள், லீலைகள், அவதார நோக்குகள் ஆகியன உற்சவங்கள் மூலம் சித்தரிக்கப்படுகின்றன. எனினும் தேரோட்டம், தீர்த்த உற்சவங்கள் ஒரே ஒழுங்குமுறையில் எல்லா ஆலயத்திலும் அமையும்.

வல்லிபுர மாயவனின் தாரண வருட மஹோற்சவம் இம்மாதம் 13ம்திகதி ஆரம்பித்து தேர்ஓட்டம், தீர்த்தம் ஆகியன முறையே இம்மாதம் 27ஆம் 28ஆம் திகதிகளில் நடைபெறும். இந்நன்நாட்களில் வெளிவரும் பத்திரிகைகள் தாங்கிவரும் சிறப்பிதழ்களுக்கு இச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


இம்மாதம் 27ஆம் திகதி திங்கள் காலை 8.00 மணிக்கு வல்லிபுர மாயவன் உக்கிர தோற்றத்தில் காட்சி தந்து சித்திரத்தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார். வீதிவலம் நிறைவுறும் போது, உக்கிரம் மறைந்து சாந்த நாயகனாக பச்சை சாத்தி இருப்பிடம் வந்தடைவார். 28ஆம் திகதி புரணைதினமான செவ்வாயன்று சந்திரோதய நேரத்தில் சமுத்திரத்தில் தீர்த்தமாடும் பொருட்டு பிற்பகல் 4.30 மணியளவில் சமுத்திரம் நோக்கி தொண்டர்கள் தோளில் சுமந்து செல்ல பக்தர்கள் புடைசூழ எழுந்தருளுவார். சமுத்திரத்தில் அனுமார், சண்டேஸ்வரர் ஆகியவற்றிக்கு அபிஷேகம் செய்தபின் சந்திரோயத்தில் தீர்த்தமாடியதுடன் ஆலயம் நோக்கிப் புறப்படுவார்.

வல்லிபுர மகாஷேத்தரத்தன் அரும் காட்சிகளை நேரில் தரிசித்து அன்றில் ஒளி ஒலிபரப்பு மூலம் கண்டும் கேட்டும் அன்றில் இச்சிறப்பிதழ்கள் மூலம் மனத்திருத்தி எம்பெருமானின் அருளை யாவரும் பெறவேண்டும் என பரந்தாமனை யாசிக்கின்றேன்.

ஓம் நாராயணா நம

இ. அன்னலிங்கம்,
முகாமை அறங்காவலர்

## ஆலய வரலாறு





தாள். கண்டகனைவைக் கருத்தில் கொண்டாள். கடற்கரையிலே அமைதியாக இருந்து கண்களை மூடித் தியானிக்கத் தொடங்கினாள். தனது இரு கைகளையும் கடலின் பக்கம் நீட்டியவாறு நீலவண்ணனை மனதில் நினைத்து தன்னை மறந்து மாயோனை மனதில் வைத்தாள்.

அப்பொழுது மூவுலகையும் அளந்த உத்தமன் உலகெல்லாம் அறிய வல்லிக்கு அருள்புரிய உளங்கொண்டான். கடலிலே விந்தைகளைக் காட்டிக் கொண்டிருந்த மீனாக வந்த எம்பெருமான் துள்ளி வந்து வல்லியின் பரத்திலே விழ வல்லி தன்மடியிலே வைக்க அழகிய திருக்குழந்தையாக உருவெடுத்தாம். கண்ணபிரான் வல்லியையும் ஏனையோரையும் மெய்சிலிர்க்க வைத்தான்.

கண்களைத் திறந்த வல்லி தன்மடியிலே மூர்த்தி திருவிருக்கும் வண்ணம் கண்டாள். தன்னை மறந்தாள். தலைவன் தாழ்பணிந்து தழைத்தாள். இதனைக் கண்ட மக்கள் கூட்டம் கடலலையையும் விஞ்சிய ஆர்ப்பரிப்போடு மெய்மறந்து நின்றனர். வல்லி குழந்தையை அளவிலா ஆனந்தத்தோடு தாலாட்டிச் சீராட்டுவதைப் பார்த்து அவளின் கட்டளைக்கு ஒழுகக் காத்துநின்றனர் மக்கள் கூட்டம்.

வல்லி ஒரு பல்லக்கினை வரவழைத்து அழகான அக்குழந்தையை பல்லக்கில் வைத்து எடுத்து வரும்படி பணித்தாள். பல்லக்கின்பாரம் அதிகரித்து அதிகரித்து மேலும் காவிச்செல்ல முடியாத அளவிற்கு பாரங்கூடவே அந்த வெண்மணல் பரப்பிலே பல்லக்கை வைத்து இளைப்பாறினார்கள். அக்கணமே மாயோன் மாயமாகி மறைந்து அந்தண வடிவத்தில் தோன்றி ஒரு சக்கரத்தைக் கொடுத்து ''இதனை வைத்து பு,சிக்க'' எனக் கூறி மறைந்தார்.

அந்த இடத்திலேயே மூலமூர்த்தியாக சக்கரத்தை வைத்து ஆலயம்ாக ஆரம்பித்ததுதான் இன்று உலகெல்லாம் புகழ் பரப்பி விண்ணளாவில் உயர்ந்து நிற்கும் ஸ்ரீ வல்லிபு ஆழ்வார் ஆலயமாகும்.

இ.நாகேந்திரராஜா, J.P
ஆசிரியர், யாழ்.ஹாட்லிக் கல்லூரி,
வல்லிபுர ஆழ்வார் ஆலய மகாசபை உறுப்பினர்.

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஸ்ரீவல்லபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் பெருவிழா புரட்டாதி மாதம் 17தினங்கள் நடைபெறுகின்றது. இப் பெருவிழாவின் போது விரதமிருந்து வழிபடும் பக்தர்கள், தொண்டர்கள், தமிழ்மக்கள் அனைவருக்கும் எம்பெருமான் இஸடசித்திகளை வழங்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். தமிழ்மக்கள் அமைதியையும் சாந்தியையும் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வ. கருணாமூர்த்தி,
செயலாளர் (அறங்காவலர் சபை).

**கணேசன் ஹாட்வெயர்**
பிரதானவதி T.P: 2263290 நெல்லியடி
கட்டிடப் பாவனைக்கான சகலவிதமான பொருட்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்திரா கபே**
சகல வைபவங்களுக்குமான சிற்றுண்டிகள், உணவுவகைகள் ஓடர்களுக்கு பெற்றுக்கொள்ளலாம்.
T.P: 2263290

**ராஜன் வீடியோ சென்றர்**
இந்திரம்மன் கோயிலடி,
துன்னாலை மத்தி, துன்னாலை.
பழைய புதிய வீடியோ கசற்றுக்கள், வீடியோ CDக்கள் போன்றவற்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடுவது.
தொடர்புகளுக்கு 077 6106714

**இரத்தினம் பேபி.அன் பான்சி**
பிரதானவீதி, நெல்லியடி.
குழந்தைகளுக்கான சகலவிதமான உணவுவகைகள், உப்பு வகைகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் எனபவற்றை ஒரேயிடத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டியது

**தம்ரோ தளபாட விற்பனை நிலையம்**
பிரதான வீதி, நெல்லியடி.
எம்மிடம் சகல விதமான மர, பிளாஸ்ரிக் தளபாடங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 0212263970

**குகரதி புடவை அகம்**
**ராதா சில்க்**
பிரதானவீதி, நெல்லியடி.
எம்மிடம் சகலவிதமான தைத்த உடைகள், துணிவகைகள், சாறிகள், சேட்டிங் சூட்டிங் வகைகள் கல்யாணப் பட்டுப்புடவைகள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.


**கஜமுகன் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்**
பிரதானவீதி, நெல்லியடி. எரிபொருள் நிரப்பு நிலைய அருகாமை
எம்மிடம் கொங்கிறீட், கிறில்கல், பூச்சாடிகள், ஓடு வகைகள், மற்றும் கட்டிடப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

*மலரமைப்பு* வடகரவை
**இரா. கங்கைமைந்தன்**
(கரவெட்டிச் செய்தியாளர்)

**கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூ.சங்கம்**
எமது சேவைகள்
- நுகர்ச்சி,
- வியாபாரம்
- உணவகம்
- தகரக்கொட்டை வாடகை
- கதிரை வாடகை
- புடவை நிலையம்
- எரிபொருள சேவை
- வெதுப்பக சேவை
- வாகனபபகுதி சேவை
- தொலைபேசி சேவை
- விவசாய சேவை
- கட்டிடப்பொருள் விற்பனை
- கைத்தறிநெசவு
- கிராமிய வங்கிசேவை,
- போட்டோபிரதிசேவை,
- பாலா பாடசாலை சேவை.

# ஐ.ஸீ.ஸி.சம்பியன் கிண்ணப்போட்டி – 2004

## அரையிறுதி ஆட்டம்


பிளிங்ரோவ்வை ஆட்டமிழக்கச் செய்த பிராவோ


இறுதி விக்கெற்றை வீழ்த்திய லாராவும் கின்ட்ஸூம்.


ரன் அவுட்டாகிறார் ஸ்டரஸ்


கிண்ணத்தைவென்ற மகிழ்வில்

## இங்கிலாந்து அணி அதிர்ச்சித் தோல்வி மினி உலகக்கிண்ணம் மேற்கிந்திய அணிக்கு

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த ஐ.சி.சிசம்பியன் கிண்ண இறுதிப் போட்டியில் மேற்கு இந்திய தீவுகளணி 2விக்கெற்றுக்களால் வெற்றிபெற்று இங்கிலாந்து அணியை தோல்வியடையச் செய்துள்ளது.

நேற்று முன்தினம் இலண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இவ் இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகளணித் தலைவர் பிரையன் லாரா இங்கிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

ஆரம்பத துடுப்பாட்ட வீரர்களாக டெரஸ்கோதிக்கும் சோலங்கியும் களமிறங்கினர். ஆயினும் அணியின் மொதத எண்ணிக்கை 12ஆக இருந்தபோது சோலங்கி 4ஓட்டங்களுடன ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். வோகன்-7, ஸ்டரஸ்-18, பிளிங்ரொப்-3, கொலிங்வூட்-16, ஜோண்ஸ்-6 கைல்ஸ்-31 உதிரிகள்-23இவர்களில் மூவர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். டெரஸ்கோதிக் மட்டும் மிகச்சிறப்பாக விளையாடி 104ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

.பந்துவீச்சில் கின்ட்ஸ் 3விக்கெறறுக்களையும் பிறட்ஷோ 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

218ஓட்டங்கள் பெற்றால் மினி உலகக் கிண்ணம் எமது கையில் என்ற எதிபார்ப்போடு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகளணிக்கு ஆரம்பத்தில் இங்கிலாந்து வீரர்கள் உதிரிகளை அதிகம் வழங்கினர்.

கைல்ஸ் ஹின்ட்ஸ் ஆகியோர் ஆட்டத்தைத் தொடக்கிய போதும், ஹின்ட்ஸ் 3ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அதைத் தொடர்ந்து விக்கெற்றுக்கள் மளமளவென சரிந்தன. ஒரு நிலையில் 5விக்கெற்றுக்களை இழந்து 80ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது மேற்கிந்திய அணி.

சந்தர்போல் மட்டும் பொறுமையாக விளையாடினார். 47ஓட்டங்களைப் பெற்றபோது கொலிங்வூட்டின் பந்து வீச்சில் வோனிடம் பிடி கொடுத்து அவர் ஆட்டமிழந்தார். இறுதியாக ஒன்பதாவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த பிறட்ஷோ-பிறவுண் ஆகியோர் மிகச் சிறப்பாக ஆடி அணியை வெற்றிபெறச் செய்தனர். பிறவுண் ஆட்டமிழக்காது 35ஓட்டங்களையும் பிறட்ஷோ ஆட்டமிழக்காமல் 34ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 35ஓட்டங்கள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. பிளிங்ரொப் 3 விக்கெற்றுக்களையும் ஹர்மிஸன் கொலிங்வூட் ஆகியோா தலா 2 விக்கெற்றுக்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் 2விக்கெற்றுக்களால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்று மினி உலகக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டித் தொடர் ஆட்ட நாயகனாக ராம்நரேஷ் சர்வான் தெரிவுசெய்யப்பட்டார். இவர் இத்தொடரில் இருமுறை ஆட்ட நாயகன் விருதைப் பெற்றிருந்தார்.

ஒருநாள் போட்டிகளில் டிரஸ்கோதிக் தனது 8ஆவது சதத்தையும் பிரையன்லாரா தனது 100ஆவது பிடியையும் இப் போட்டியில் பெற்றதும் முக்கிய அம்சங்களாகும்.(ப-7)


வோனின் விக்கெற்றை வீழ்த்தும் பிறட்சோ.


சதமடித்த டெரஸ்கோதிக்.


சோலங்கி ஆட்டமிழந்து செல்கிறார்.


அதிக ஓட்டம்பெற்ற சந்தர்போல்

## டேவிஸ் கோப்பை டென்னிஸ் அமெரிக்கா முன்னிலையில்

டேவிஸ் கோப்பை உலக குழு டென்னிஸ் அரையிறுதிப் போட்டியில் பெலாரஸ் அணிக்கு எதிராக அமெரிக்கா 2:0என்ற முன்னிலையில் பெற்றது. பரிசில் நடந்து வரும் டேவிஸ் கோப்பை உலகக் குழு டென்னிஸ் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்கா, பெலாரஸ அணிகள் விளையாடுகின்றன. அண்மையில் நடைபெற்ற முதல் ஒற்றையர் போட்டியில் முன்னணி வீரரான அமெரிக்காவின் அனடிரோடிக் 6-1,4-6,6-4என்ற நேர்செற்களில் பெலாரஸின் விளாடிமீர் வோல்ட்ச கோவை வென்றுள்ளார். மூன்றாவது செற்றில் ரோடிக் 155 கி.மீ வேகத்தில் விளையாடினார் இதன் மூலம் 153கி.மீ. வேகத்தில் விளையாடிய தனது முந்தைய உலக சாதனையை இவர் முறியடித்துள்ளார். இரண்டாவது ஒற்றையர் போட்டியில் மார்டிபிஷ் 7-5,6-2,3-6,6-3என்ற செற்களில் மேக்ஸ் மிர்னயை வெற்றி பெற அமெரிக்கா 2.0என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

ஸ்பெயினில் நடைபெறும் மற்றொரு அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. முதல் ஒற்றையர் போட்டியில் ஸ்பெயினின் கார்லோஸ் மோயா, பிரான்சின் ஹென்றி மார்சயூவை எதிர்த்து ஆடினார். 4மணி, 29நிமிடங்கள் நடந்த இப் போட்டியில் மேயா 3-6,6-3,6-2,3-6,3-6என்ற செற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார் இன்னொரு போட்டியில் இஸ்பெயினின் ஜுவான் கார்லோஸ் பெரேரா 6-3,6-1,1-6,6-3என்ற செற்றில் பிரான்ஸின் பபரைஸ் சானட்ரோவை வீழ்த்தினர். இதன் மூலம் இரு அணிகளும் 1-1என்ற சமநிலையில் உள்ளன. (ப-7)

## யாழ்.உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டி

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஏபிசி லீக் சுற்றுப்போட்டியில் நாளை மாலை 4மணிக்கு பாடும் மீன் பி.அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணியும் மாலை 5மணிக்கு பாடும மீன் ஏ அணியை எதிர்த்து கலைவாணி ஏ அணியும் விளையாடவுள்ளன.(ப-7)

## ஐ.சி.சி.போட்டியில் தோல்வி இலங்கை அணியின் முகாமையாளர் மாற்றம்

இலங்கைக் கிரிக்கெற் அணி ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியிடம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானில் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் இவ் வேளையில் இலங்கை அணியின் முகாமையாளர் மாற்றப்பட்டுள்ளார்.

இலங்கையின் முன்னைய டெஸ்ட் கிரிக்கெற் ஆரம்பத்துடுப்பாடடவீரர் பிரண்டன் குறுப்பு பாகிஸ்தான் சுற்றுத் தொடருக்கான அணி முகாமையாளராக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்.

42வயதான பிரண்டன் குறுப்பு அணி முகாமையாளராக நியமிக்கப்பட்டிருப்பது தற்காலிகமானதே. முன்னைய அணி முகாமையாளர் அஜீத் ஜயசேகர தன் குடும்பத்துடன் ஓய்வெடுக்க விரும்பியதாலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பதவியில் புதிய சிந்தனைகளுடனும் கண்ணோட்டத்துடனும் கூடியவர்கள் அமர வேண்டுமென்ற இலங்கைக் கிரிக்கெற் நிறைவேற்றதிகாரி டியூலிப் மெண்டிஸின் எண்ணத்திற்கமையவே இந் நியமனம் இடம்பெற்றிருக்கிறது. ஆயினும் இவரது நியமனம் தறகாலிகமானது என்றே விளையாட்டு அமைச்சுக்கு செய்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அணிக்காக 4டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய குறுப்பு நியூஸிலாந்து அணிக்கு எதிராக 1987ல் ஒரு போட்டியில் 201ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். வலதுகைத் துடுப்பாட்ட வீரரான இவர் 54ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்த நியூசிலாந்திற்கு டிசம்பர்மாதம் செல்லும் இலங்கை அணி அங்கு விளையாடவுள்ள தொடரில் இருந்து 2 வருடத்திற்கு முழுநேர முகாமையாளராக புதிதாக ஒருவர் நியமிக்கப்படுவார் என இலங்கைக் கிரிக்கெற்சபை அறிவித்துள்ளது.(ப-7)

## விளையாட்டு செய்திகள்

## ஒலிம்பிக்கில் கிடைக்காத தங்கம் பாரா ஒலிம்பிக்கில் கிடைத்தது


நெதர்லாந்தைச் சேர்ந்த ரொன்னி ஹிஜின்ன் பிறிபரஸ், இவர் பாரா ஒலிம்பிக் போட்டியில்ஈரானை எதிர்த்து குழுநிலை டேபிள் டென்னிஸ் போட்டியில் விளையாடுகிறார்.

ஒலிம்பிக்கில் தங்கம் கிடைக்காத ஏக்கத்தில் இருக்கும் இந்திய ரசிகர்களுக்கு பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்று ஆறுதல் தருகிறாா தேவேந்திரா. இவர் ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம் வென்றதோடு புதிய உலக சாதனையும் படைத்துள்ளார். தவிர இதுதான் இம்முறை இந்தியா பெறும் முதற் பதக்கமும் ஆகும்.

கிரீஸ் தலைநகர் எதென்ஸில் நடைபெறும் ஊனமுற்றோருக்கான பாரா ஒலிம்பிக் போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டியில் பங்கேற்பவர்கள் அவர்களது ஊனத்தின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக (பார்வையற்றோர், வீல்சேர், பக்கவாத பாதிப்பு) பிரிக்கப்பட்டனர். போலியோ, கை, கால் இழந்தவர்களுக்கான எப்-44/46பிரிவில் தேவேந்திரா இடம்பெற்றார். இவர் 62.15மீற்றர் தூரம் எறிந்து தனது முந்தைய உலக சாதனையை (59.77மீற்றர்) முறியடித்தார். சீன வீரர்களான காவோ (55.77மீற்றர்) வாங் (55.54 மீற்றர்) முறையே வெள்ளி வெண்கலம் வென்றனர்.

ராஜஸ்தான் மாநிலம் சாதுல் பூரில் பிறந்த தேவேந்திரா கடந்த சில ஆண்டுகளாக வெற்றிமேல் வெற்றிபெற்று வருகிறார். 2003, பர்மிங்காம் உலக சம்பியன்ஸிப் போட்டியில் இவர் 59.77மீற்றர் தூரம் எறிந்து சாதனை படைத்தார். இப்போது எதென்ஸில் தங்கம் வென்றது குறித்து இவர் கூறுகையில் பாரா ஒலிமபிக்கில் தங்கம் வெல்ல வேண்டும் என்பதே எனது நீண்ட நாள் கனவு. இது நனவாகியுள்ளது. என்னோடு பங்கேற்றவர்களைக் காட்டிலும் சிறப்பாகச் செயற்பட்டேன். உலக சாதனையும் படைத்தது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது என்றார்.

சமீபத்தில் நடந்த எதென்ஸ் ஒலிம்பிக்கில் அஞ்சு தங்கம் வெல்வார், ஹாக்கியில் இந்தியாவுக்குத் தங்கம் கிடைக்கும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரத்தோர் மட்டுமே வெள்ளிவென்று மானம் காத்தார். இந்நிலையில் மிக நீண்ட இடைவெளிக்குப்பிறகு சாவதேச அரங்கில் இந்தியா சாதித்துள்ளது. அதாவது 1980ஒலிம்பிக் ஹொக்கியில் தங்கம் வென்றதற்கு பிறகு இப்போதுதான் நமக்கு ஒரு தங்கம் கிடைத்துள்ளது.

இதேவேளை, தங்கம் வென்ற தேவேநதிராவுக்கு பிரதமர் ஜனாதிபதி உட்பட பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி அப்துல்கலாம் தனது வாழத்துச் செய்தியில் கூறியுள்ளதாவது தேவேந்திராவின் பெருமைமிக்க சாதனை உடல் வலிமையைக் காட்டிலும் மன வலிமை பெரிது என்பதற்கு நல்ல உதாரணம். ஊனமுற்றவர்கள் தடைகளைத் தகர்த்து சாதிக்கமுடியும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஈட்டி எறிதலில் புதிய உலக சாதனை படைத்த இவருககு எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும் என்று இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார்.

# வல்லிபுர மாயவனை தினமும் வணங்கியே நலம் பெறுவோம்

ஈழ நாட்டில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் யாழ்.குடாநாட்டின் மேற்கே பொன்னாலை வரதராஜப் பெருமாளும், கிழக்கே வல்லிபுர ஆழ்வார் சுவாமியும், யாழ் நகரில் வண்ணை வேங்கடேசப் பெருமாளும் இருந்து அருளாட்சி செய்கின்றனர். அவற்றுள் நெய்தல் நிலமும் மருதநிலமும் கலந்த இடத்தில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ளது.

மருதங்கேணி என்ற இடத்திற்குச் செல்லும் பருத்தித்துறை மருதங்கேணிப் பெருவீதியின் கிழக்குப் புறமாக வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் கிழக்கே இரண்டு மைல் தொலைவில் வங்காள விரிகுடாச் சமுத்திரம் அமைந்துள்ளது. ஆகவே அந்தப் பகுதி நெய்தல் நிலமாகக் காணப்படுகிறது. மேற்குப் பகுதியில் குருக்கட்டுப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. பிள்ளையார் கோவில் வெளிவீதியில் மேற்குப்புறமாக ஒரு கேணி அமைந்துள்ளது. அதன் தீர்த்தம் சகல நோய்களையும் தீர்க்கும் சக்தி கொண்டது. அடியார்கள் இக் குளத்தில் நீராடி விநாயகரை வணங்கிய பின் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் செல்வர்.

ஆலயத்தில் புரட்டாதி மாதம் வருடாந்த மஹோற்சவம் நடைபெறுகிறது. பதினேழு நாட்கள் விழாக்கள் நடைபெறும். வெண்ணெய்த் திருவிழாவிலும்



வல்லிபுர ஆழ்வார் சுவாமி

சப்பறத் திருவிழாவிலும் தேர்த் திருவிழாவிலும் அடியார் பெருந்திரளாகக் கூடி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

தீர்த்த விழா இரு தினங்கள் நடைபெறும். புரட்டாதிப் பூரணைத் தினத்தில் சமுத்திர தீர்த்தமும் அடுத்த தினம் குளத் தீர்த்தமும் நடைபெறும். குளத் தீர்த்தம் பட்டுத் தீர்த்தம் எனவும் வழங்கப்படும்.

தேர்த் திருவிழா அன்று யாழ்.குடாநாட்டு அடியார்கள் லட்சக்கணக்காகக் கூடி நிற்பர். நல்லூர்த் திருவிழாவில் வேற் பெருமான் இடம்பெறுவது போல இவ் விழாவில் சக்கரத்தாழ்வார் சுவாமிகளே இடம்பெறுவர்.

சுவாமி தேரில் வீதி வரும் போது கோவிந்தா! கோபாலா! மாயவா! என்ற தொனி வானைப் பிளக்கும். தேர் வீதியில் வலம் வரும் போது சனசமுத்திரத்தில் மிதக்கும் தோணி போல் காட்சியளிக்கும். குடாநாட்டில் உள்ள

**கவிமணி கந்தமுருகேச தாசனார்**

பஜனைக் குழுவினர் பக்திக் கடலில் மிதந்து பாடியும் ஆடியும் செல்வர். நாதஸ்வர ஓசை பக்திப் பிரவாகத்தை அடியவர் மனங்களில் ஏற்படுத்தும்.

சைவ அடியார்களாகிய நாம் வல்லிபுர சுவாமியின் தேர்த் திருவிழாவிலே பங்குபற்றி அடியார் வேண்டுவனவற்றை வேண்டியவாறு வழங்கும் மாயவனின் நல்லருளைப் பெற்று நலம் யாவும் பெற்று இன்புறுவோமாக. ❋

## ஒழுக்காற்று விசாரணைகளுக்காக

# ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நால்வரை ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதென்று கட்சியின் தலைமைப்பீடம் எடுத்துள்ள முடிவு குறித்து கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வரி மன்னிப்பிறகான நகல் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சபையில் சமுகம் அளிக்காதிருந்த காரணத்தினாலேயே இந் நான்கு உறுப்பினர்களுக்கெதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென முடிவெடுக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரமேதாஸ, நவீன் திஸாநாயக்க, தீலிப் விதாராச்சி மற்றும் மேரி நளின் பெரேரா ஆகிய நான்கு உறுப்பினர்கள் மீதே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்களை இன்று திங்கட்கிழமை கட்சியின் ஒழுக்காற்று விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தர விட்டப்பட்டுள்ளது. (ந-8)

## தேரேறி வாராய் எம் துயரெல்லாம் தீராய் !

வல்லிபுரத்துறையும் வள்ளலே மாயவனே
எல்லையில்லா உலகை ஓரடியில் தாவிய தயாநிதியே
கல்லையொத்த மனம் கனிந்துருக குழலூதும் கண்ணா
தேரேறி வாராய் எம் துயரெல்லாம் தீராய்

வில் வளைத்த விஜயனுக்கு உபதேசம் செய்தவனே
முல்லை நிலத் தெய்வமே முகுந்தனே; முருகனுக்கு
நல்ல முறை மாமனே நானிலம் காக்கும் நாயகனே
தேரேறி வாராய் எம் துயரெல்லாம் தீராய்

வல்லி இலவல்லி வல்வினை நீக்கி வரமருளி
நலலியல்பின் நலந்தருசீர் மீனமாகி அவள் மடியில் மகவாகிய
வலலவனே வண்ணவருட் சக்கரமாய் மாறி அருள் புரியும்
கோவிந்தனே
தேரேறி வராய் எம் துயரெல்லாம் தீராய்

வல்லிபுரத்தலம் வந்து அன்பால் வணங்கிடுவோர் தம்
அல்லல் அனைத்து மகற்றி அகத்திருள் அற்றொழித்து
கல்வியியலாளராய் மண்ணில் வாழ வரமருளும் நாமகள்
நாயகனே
தேரேறி வாராய் எம் துயரெல்லர்ம் தீராய்

நாராயணம் வாழ்க; நம்பெருமான் தன் நலம் புகழும்
பாராயணம் வாழ்க; பண்பான அடியார் பரவு மருள்
பேராயிரம் வாழ்க; பேணிப் பணிவார் பெறற்கரிதாய்
கீதாயிரம் வாழ்க; வல்லிதன் சீரருள் வாழ்க வாழ்கவே

**பிரம்ம சாத்வி**

### உலக குடியிருப்பாளர் தினத்தை முன்னிட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள்

(சாவகச்சேரி)

எதிர்வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி 'கிராம அபிவிருத்தியின் உந்து சக்தி - நகரங்களாகும்' என்ற தொனிப் பொருளில் உலக குடியிருப்பாளர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சினதும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பின் மூலம் கிராமப்புற அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக குடியிருப்பாளா தினத்தை வலியுறுத்தி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை பொருத்தமான இடங்களல் பதாதைகளைத் தொங்க விட நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களையும் சுற்றறிக்கை மூலம் கோரியுள்ளார். (க-47)

### மீளக் குடியமர்ந்தோருக்கு பாவனைப் பொருட்கள்

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட மீளக்குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கியுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள 150 குடும்பங்களுக்கே இவ்வாறு வீட்டுபாவனைப் பொருட்கள் யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இக் குடும்பங்கள் இதனால் பெரிதும் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-35)

### தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினங்களில் நடாத்தும் அகத்தியர் தேவரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் சுளிபுரம் வடக்கம்பறை ஸ்ரீமுத்து மாரியம்மன் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைவரும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரும் ஆலய பரிபாலனசபையினரும் கேட்டுள்ளனர். (க)

# செய்தித்துளிகள்

### பிரதான சந்தை புனரமைக்கப்படவில்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள பிரதான சந்தையான மருதங்கேணி சந்தை இதுவரை காலமும் புனரமைக்கப்படாததால் அப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகால யுத்த நடவடிக்கையால் சேதமடைந்த இச்சந்தை சமாதான சூழ்நிலை ஏற்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்து 3 வருடங்களாகியும் புனரமைக்கப்படாமலிருந்து வருகிறது.

இதனால் இப்பகுதி க்கள் பளை சந்தைக்கு அல்லது கிளிநொச்சி சந்தைக்கு செல்ல வேண்டியுள்ளது.

எனவே, இச் சந்தையை புனரமைக்க பருத்தித்துறை பிரதேச சபை கூடிய கவனமெடுக்க வேண்டுமென மீளக்குடியமர்ந்த மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-35)

### கலைப் பேரரசு விருது இம்முறை மெற்றாஸ் மயிலுக்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்குரிய கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருது நாடகக் கலைஞர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மயிலுக்கு வழங்கப்படவுள்ளது.

மேற்படி, விருதினை மெற்றாஸ் மயிலுக்கு வழங்குவதென விருதுக் குழுவினர் தீர்மானித்துள்ளதாக அமைப்பின் இணைப்பாளர் நயினை கி.கிருபானந்தா தெரிவித்துள்ளார். (ந)

### போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளிற்கிடையே எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 'பூமாலை கட்டுதல்', 'கோலம்போடுதல்' ஆகிய போட்டிகள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடாத்தப்படவுள்ளன.

தரம் 6,7 இல் கற்கும் மாணவர்களிற்கு 1 மணிநேரமும் தரம் 8,9 இல் கற்கும் மாணவருக்கு 45 நிமிடமும் என்ற வகையில் இப்போட்டிகள் நடாத்தப்படும் என தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் செல்வராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தரம் 10,11,12,13 இல் கற்கும் மாணவர்களிற்கு சைவ சமய வினாடிவினாப் போட்டி ஒன்றும் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (க-127)

### புலமைப்பரிசில் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தென்மராட்சிக் கல்வி வலயப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஜீ.சீ.ஈ.சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றைச் சேர்ந்த 61 மாணவர்களே இத்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாகத் தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (க-49)

### பரிசளிப்பு விழா

(அல்வாய்)

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் பரிசளிப்புவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் ம.குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்து கொள்ளவுள்ளார். (க-111)

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களத் தலைவர்களிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-47)

### களவாடப்பட்ட ஆடுகள் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோரால் அண்மையில் களவாடப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட ஆடுகள் மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

எனவே, ஆடுகளின் உரிமையாளர்கள் தகுந்த அடையாளங்களைக் காட்டி ஆடுகளை மீளப் பெறுவதற்கு நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொள்ளும படி கேட்கப்பட்டுள்ளது. (க-19)

### ஐ.நா தினத்தை ஒட்டி போட்டிகள்

(சாவகச்சேரி)

சாகவச்சேரி லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி கல்விவலயத்தினரும் இணைந்து ஐக்கிய நாடுகள் தினத்தை அடுத்த மாதம் 10 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கொண்டாடவுள்ளனர்.

இதனையொட்டி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையே பல்வேறு போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் அடுத்த மாதம் 5 ஆம திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.(ப-29)

### வாசிப்பு மாதமாக பிரகடனம்

(சாவகச்சேரி)

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை வலியுறுத்த சகல திணைக்களங்களிற்கும் உரிய வாசகம் பொறிக்கப்பட்ட பதாதைகள் மேற்படி சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-47)

### கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிற்கு சத்துணவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயப்பணிப்பாளர் வ.செல்வராசா கோரியுள்ளார். (க-47)

### பின்தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பு பிரகடனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு அறிவிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் நஞ்சித் மென்டிஸை அண்மையில் தான் சந்தித்துப் பேசிய போது கூறியதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (க-61)

# முதிர்ச்சி அடையாத குழந்தைகளின் பிரச்சினைகள்

சிசு தாயின கருப்பையில் வளர்ச்சியடையத் தேவையான 280 நாட்களுக்கு முன்பே பிறந்துவிடுவதாலும், மட்டுமன்றி 19அங்குலத்திற்



கும் குறைவான உயரமும் (நீளமும்) 6அல்லது 7பவுண்டு எடைக்கு குறைவாகவும் தலையின் சுற்றளவு குறைந்தும், எலும்பின் தன்மை பாதிப்படைந்தும் இருக்குமாயின, அக் குழந்தையை முதிராக்குழந்தை **(Premature Baby)** என்றழைக்கிறோம்.

இக்குழந்தைகளுக்கு வளர்ச்சி சார்ந்த சில பிரச்சினைகள் உண்டாகின்றன. இவர்களின் வளர்ச்சி அளவினை மற்ற சராசரிக் குழந்தைகளின் வளர்ச்சிக் குறீயீடுகளோடு ஒப்பிடுமபோது இவர்களிடம் காணப்படும் பாதிப்புகளை அறியமுடிகிறது.

இத்தகைய பாதிப்பு குழந்தை பூப்பெய்தும் பருவத்தை அடையும் வரை நீடித்திருக்கிறது.

முதல் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குள் பவகையான நோய்களின் கொடுமைகளுக்கு ஆளாகின்றன. எளிதில் வியாதிகளைத் தொற்றிக்கொள்ளும் உடலவாகும், பிரசவத்தின்போது அல்லது கருப்பையில் இருக்கும்போது ஏற்படும் ஒட்சிசன் பற்றாக்கைகுறையின் காரணமாக பார்வை பாதிபபும் பெரும்பாலான குழந்தைகளுக்கு உண்டாகிறது. உட்காருவது, நிற்பது, நடப்பது, பேசுவது போன்ற இயக்க வளர்ச்சி சார்ந்த செயல்களிலும் இவர்கள் பின்தங்கி விடுகின்றனர்.

மேலும் இக்குழந்தைகள் அசையும் பொருட்கள், நிறங்கள், ஒலி, வெளிச்சம் போன்ற புறத்தூண்டுதல்களுக்கு மிகையான அளவிற்குத் தூண்டப்பட்டு உணர்ச்சி வயப்படுகின்றனர். உடல் அமைப்பிலும் பாதிப்பு ஏறபட்டு வலிப்புவாத இசிவு நோய் குழந்தைகளாகவும் **(Spastic Children)** மனவளர்ச்சி குறைந்தவர்களாகவும் **(Mentally Retarded)** திக்குவாய் போன்ற பேச்சுக் கோளாறு உடையவர்களாகவும் தோன்றிட வாய்ப்புகள் உள்ளன.

இவர்களின் நுண்ணறிவும் குறைவாக இருப்பதால் கல்வி கற்பதிலும் குறிப்பாகக் கணிதம் பயிலுவதில் பின்னடைவு ஏற்படுகின்றது.

சமூக வளர்ச்சியிலும், பிறரோடு பழகுவதிலும் காணப்படும் சிக்கல்கள் பதின்மர் பருவம் அடையும் வரை நீடித்திருப்பதைக் காண்கிறோம். முரண்டுபிடிப்பது, சண்டித்தனம் செய்வது, எதிரிடையாகச் செயல்படுவது, எளிதில் எரிச்சல் அடைவது முன்கோபம் கொள்வது போன்ற மனவெழுச்சிக் கோளாறுகளும் இவர்களிடம் தோன்றுகின்றன. விரல சப்புதல், எளிதில் விபத்துக்குள்ளாகும் தன்மை, நரம்புத் தளர்ச்சி, பெற்றோர்களுக்கு அதிர்ச்சியைத் தரும்.செயல்களைச் செய்வதில் துடிப்பு சுயநலப் போக்கு ஆகியவையும் காணப்படுகின்றன.

குழந்தை வளர்ச்சியில்லாமல், குறையுடன் பிறந்துவிட்டானே என்கிற பயத்தின் காரணமாகப் பெற்றோர்கள் அளவுக்கு அதிகமான அக்கறை, பாதுகாபபு, செல்லம் ஆகியவற்றைக் காட்டி, குழந்தை

**டாக்டர் ஜி. ராஜமோகன்**
**MBPS, PH.D.(Beh.Sc)**

யைப் பாழாக்கிவிடுகின்றனர் என்பது சில குழந்தை உளவியலாளர்களின் கருத்தாகும். இதற்கு மாறாக சீரான பராமரிப்பும், சத்தான உணவு வகைகளும், சிந்தனையைத தூண்டிவிடும் சூழ்நிலைகளும், இக் குழந்தைகளின் சிக்கல்களைத் தீர்த்து, நல்வழிப்படுத்தும் என்பது ஆய்வுகளின் முடிவாகும். □

# தென்மராட்சிக் கல்வி வலய விவசாய விஞ்ஞான குறுவினா போட்டியில் வெற்றி பெற்றோர்

(கிளிநொச்சி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட விவசாய விஞ்ஞான குறுவினா-விடைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு,

**1000 மாணவர்களுக்கு உட்பட்ட பாடசாலை**

**தரம் 10**

1ஆம் இடம்:-அ.சசிரேகா - உசன் இராமநாதன் மகா வித்தி.
2ஆம் இடம்:-இ.ரம்ஜா - சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி.
3ஆம் இடம்:-மா.மதன் - கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி.

**தரம் 11**

1ஆம் இடம்:-கு.நிதர்சன் - கச்சாய் அ.த.க.பாடசாலை
1ஆம் இடம்:-க.பத்மினி - கச்சாய் அ.த.க.பாடசாலை
3ஆம் இடம்:-சி.சிவாஜினி - சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி.

**1000 மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலை**

**தரம் 10**

1ஆம் இடம்:-சி.நிரோஜா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.
2ஆம் இடம்:-கா.கமலபாலன் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:க.துளசிகா - சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**தரம் 11**

1ஆம் இடம்:-க.கஜந்தினி - சாவகச்சேரி இந்துக்கல்லூரி
1ஆம் இடம்:-ப.ஜனனி - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.
3ஆம் இடம்:-செ.கோகிலா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

விவசாய விஞ்ஞாள குறு வினாப்போட்டி (எழுத்து) யில் தரம் 10,11இல் அதி கூடிய புள்ளியைப் பெற்று எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள வினாடி வினாப் போட்டியில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**தரம் 10**

| | |
|---|---|
| அ.சசிரேகா - | உசன் இராமநாதன் மகா வித்தி. |
| சி.யாழினி - | உசன் இராமநாதன் மகா வித்தி. |
| செ.வின்சிகன் - | உசன் இராமநாதன் மகா வித்தி. |
| சி.நிரோஜா - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| யோ.சாலினி - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| ச.தட்சாயினி - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| பு.சிவப்பிரியன்- | கச்சாய் அ.த.க.பாடசாலை |
| பொ.குருவேலகன் - | கச்சாய் அ.த.க.பாடசாலை |
| இ.அருட்குமரன் - | கச்சாய் அ.த.க.பாடசாலை |

**தரம் 11**

| | |
|---|---|
| ப.ஜனனி - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| செ.கோகிலா - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| நா.சுரேகா - | மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. |
| க.கஜந்தினி - | சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| பா.திபேகா - | சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| ந.இன்பராஜ் - | சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| கு.நிதர்சன் - | கச்சாய் அ.த.க.பாடசாலை |
| க.பத்மினி - | கச்சாய் அ.த.க.பாடசாலை |
| கு.நகுலேந்திரன்- | கச்சாய் அ.த.க.பாடசாலை |

(ந-127)

# இடைக்கால ஆட்சி அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் நாம் அரசுக்கு ஆதரவு வழங்குவோம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இடைக்கால ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைக்கு விசேட நிபந்தனைகளின்றி



ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோசனைக் கவுன்சில் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் அனுப்பியுள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறு பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததன் பின்னர் இத்தகைய சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோசனைக் கவுன்சில் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்தால் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார். (க-61)

## சிரமதானம்

(சாவகச்சேரி)

2000ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்து காணப்படும் தென்மராட்சி கால் நடை வைத்திய அதிகாரி பணிமனை எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.

இப் பணிமனை தற்போது அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி கண்டி வீதி சாவகச்சேரியில் தனியார் கட்டம் ஒன்றில் இயங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-127)

## மின்சாரம் வழங்க நடவடிக்கை

(அம்பன்)

வடமராடசி கிழக்கு குடத்தனை மணற்காட்டுப் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது வல்லிபுரம் பகுதியில் இருந்து மூன்று கிலோமீற்றர் வரை மின்தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. (க-56)

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கருமபீடம் கொடிகாமத்தில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கருமபீடம் ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் கொடிகாமத்தில் இயங்கவுள்ளது.

தென்மராட்சி கிழக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும நோக்கில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கட்டடத்தில் மேல் மாடியில் இவ் அலுவலகம் இயங்கவுள்ளது.

உதவிப் பிரதேச செயலரின் தலைமையில் இக் கருமபீடம் இயங்கவுள்ளது. முன்னர் மாதத்தில் இருதடவைகள் நடமாடும் பிரதேச செயலகம் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-47)

## வீடுகள் அமைக்க யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களில வாழும் குடும்பங்களுக்கென இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் யு.என்.எச்.சி.ஆர் 25இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகளற்ற பருத்தித்துறை லூர்த்து மாதா கோவில் முகாம்,தும்பளை இலட்சுமணன் தோட்ட முகாம், கற்கோவளம் அகதிகள் முகாம் ஆகியவற்றில் மக்கள் படும் இன்னல்களை கருத்திற்கொண்டே யு.என்.எச்.சி.ஆர்.இந்நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (க-35)

# வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைசசர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஒருவாரகால விஜயம் மேற்கொண்டு இந்தியாவிற்குப் பயணமாகிறார்.

இவ் விஜயத்தின்போது இந்தியாவின் பல வர்த்தக தொழிற்சங்க அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களை நடாத்துவார்.

இவ் விஜயத்தின் போது அமைச்சர் இந்தியாவிலிருந்து சம்பா, பாசுமதி, நாட்டரிசி போன்றவற்றை இறக்குமதி செய்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் மற்றும் அகதிகளுக்கான பிரச்சினைகள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடனும் பேச்சுக்களை நடாத்துவார். அத்துடன், சட்டவிரோத மீன்பிடி தொடர்பாகவும் இவர் பேச்சுக்களை நடாத்துவார்.

மேலும் தென்னிந்திய இணை வர்த்தக கவுன்சிலின் அதிகாரிகளைச் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் கலந்துரையாடுவார். வாகன இறககுமதி தொடர்பாக அசோக் லேடன்ட் பஸ்கம்பனியுடனும் கலந்துரையாடவுள்ளதுடன் தி.மு.க.தலைவர் மு.கருணாநிதியையும் இவர் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்துவார். (த-6)

# பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் மாபெரும் கண்காட்சி

(கிளிநொச்சி)

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப் போராடடத்தில் பெண்கள் படைத்து வரும் சாதனைகளை எடுத்துக் காட்டும் மாபெரும கண்காட்சியொன்று கிளிநொச்சியில் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதில் பகுதி பகுதியாக தாயக விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் ஒளிப்படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்தப்படும் போராயுதங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இவற்றில் போராட்டத்தில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட வரலாறுகள் குறிப்பிடப்பட்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களும் காட்சியில் இடம் பெறும். அத்துடன், விடுதலைப் போராட்டத்தில் போராளிகளால் உருவாக்கப்பட்ட பசீலன் பீரங்கி உள்ளிட்ட போராயுதங்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

மேலும் குறிபார்த்துத் துப்பாக்கியால் சுடும் போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெறுவோருக்குப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், கண்காட்சியின் சிறப்பம்சமாக விடியல்படைவீடு என்கிற மாதிரி படை முகாமும் பல சிறப்பம்சங்களுடன் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று மாதிரிக்கள மருத்துவமனையும் காட்சிப்படுத்தப்படவுள்ளது. கடற்புலிகளின் மாதிரி கடற்கலங்களின் இறங்குதளமும் இக்கண்காட்சியில வைக்கப்படவுள்ளது. (ற)

(02ஆம் பக்கத்தொடர்ச்சி)

## சிறுவர், பெண்களுக்கு...

பிரிவு(ஏ):- சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான எல்லாப் புலனாய்வுகள் மன்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தை கண்காணித்தல்;

பிரிவு(ஓ):- சிறுவர் துஷ்பிரயோகம் தொடாபாக பொது மககளிடம் இருந்து முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதலும், அத்துடன் அவசியமான விடத்து அத்தகைய முறைப்பாடுகளை தோதான அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதலும்;

பிரிவு(ஞ):- பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் நலன்களைப பாதுகாத்தல் சம்பந்தமாக பொது மக்களுக்கு தகவலும், கல்வியும் வழங்குவதாலும்;

ஆகியவை குறித்த அதிகார சபையின் பணிகளுக்குள் உள்ளடக்கப்பட்டதாக அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தை யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அரச, அரச சார்பற்ற சிறுவர்களின நலனை பேணிப் பாதுகாக்க முனையும் நிறுவனங்களின் உதவியுடன் பொதுவாக பொது மக்கள் மத்தியிலும், சிறப்பாக சிறுவர்கள் மத்தியிலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புரட்சிகரமான மேலே குறிப்பிட்ட சட்ட திருத்தங்கள் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தை முழுமையாக ஒழிக்க முடியாதுவிடினும் பாரிய அளவு மட்டுப்படுத்தவாயினும் இயலும் எனக் கருதுகின்றேன். (முற்றும்)

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும். - குறள்

வலம்புரி

# பேச்சை ஆரம்பிக்கும் முயற்சிகள் ஏதேனும் உண்டா?

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் இருதரப்பாலும் கடைப்பிடிக்கப்படும் எனக் கூறினாலும், எந்தநேரத்திலும் அந்த உடன்படிக்கை முறியலாம். யுத்தமேகம் கருக்கட்டலாம் என்பதற்கான சாத்தியங்கள் நிறையவே உண்டு.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பணியை மேற்கொள்ளும் நோர்வே அரசு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டும் ஓர் முடிவையும் காணாத நிலையில் என்னதான் செய்யலாம் எனச் சிந்திக்கின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது தமிழ் மக்களுக்கான சமாதானத் தீர்வன்று. அது தற்காலிகமான - சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான ஓர் அடித்தளம். ஆனால் இலங்கை அரசு யுத்தநிறுத்த உடன்படிக்கையோடு காலத்தை நகர்த்தி தமிழ்மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க எண்ணுகின்றது.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் திட்டமே அதுதான். அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் காலத்தை நீடிப்பதன் ஊடாக, தமிழ்மக்களின் போராட்ட வீரியத்தை- தேசப்பற்றை மெல்லமெல்ல உடைத்துவிடலாம் என அவர் கருதுகின்றார்.

ஆனால், அவரின் எதிர்பார்ப்பு ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை. இதற்குக் கடந்தகால வரலாற்று அனுபவங்கள் சான்றாக அமையும்.

தமிழ்மக்கள் தமது தாயகம், சுதந்திரம் குறித்து சிங்களத் தலைவர்களுடன் பேசியபோது அவர்கள் அதனைத் தீர்க்கதரிசனத்துடன் நோக்கியிருப்பார்களே ஆனால் இன்று இனப்பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்கமாட்டாது.

ஆனால், அன்றைய சிங்களத் தலைவர்களின் தவாறான முடிவுகள் பேரழிவுக்கு வழிவகுத்தன. தமிழ்த் தலைவர்கள் நடத்திய அகிம்சை வழிப் போராட்டங்களை சிங்கள ஆட்சியாளர்கள் அடக்கி, காடைத்தனம் புரிந்ததன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர்.

தமிழ்த் தலைவர்கள் அகிம்சை வழியில் நடத்திய போராட்டத்தை அடக்கிய சிங்களத் தலைமைகள், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போதாயினும் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்துச் செயற்பட்டிருக்கலாம். அத்தகையதொரு சிந்தனை இருந்திருக்குமாயினும்கூட யுத்தத்தால் ஏற்பட்ட பேரழிவுகளைத் தடுத்திருக்கமுடியும்.

ஆனால், அதனையும் அவர்கள் செய்ய முன்வரவில்லை. மாறாக தமிழினத்தையே அழித்துவிடவேண்டும் என்ற ஓர் அபத்தமான முடிவை எடுத்தனர்.

தமது முடிவை அமுல்படுத்துவதற்காக அவர்கள் தமிழ்மக்களைக் கொன்று குவித்தனர். இருந்தும் விடுதலையை நோக்கிப் புறப்பட்ட எந்த இனமுமே தோல்வி காணவில்லை என்ற உலக வரலாறு ஈழத்தமிழர்களின் விடயத்திலும் உறுதியாயிற்று. வெட்டவெட்ட தளைப்பதுபோல விடுதலைப் போராட்டம் ஓங்கி உயர்வுபெற்றது.

இவ்வாறு தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் வியாபகம் பெற்றதனால் சிங்கள மக்கள் விழிப்படைந்தனர். தமிழ் மக்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். அதன் காரணமாக சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறியவர்களை ஆட்சிப்பீடங்களில் அமர்த்துவதற்கு அவர்கள் முன்வந்தனர்.

மக்களின் மனநிலையை உணர்ந்த பேரினவாதிகள் சொல்லொன்றும் செயலொன்றுமாக நடந்து மக்களை ஏமாற்றினர் - ஏமாற்றுகின்றனர். கடந்த காலங்களில் தமிழ்மக்களை ஏமாற்றியதனால் நாடுபட்ட அவலம் மீண்டும் ஒருமுறை ஏற்படாமல் இருக்கவேண்டுமாயின், சிங்களத் தலைமைகள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

மீண்டும் ஏமாற்ற நினைத்தால் அது பெரும் கெடுதியாக அமைந்துவிடும் என்ற உண்மையை உணர்ந்துகொண்டு சமாதானப் பேச்சை தொடர்வதற்கான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபடவேண்டும்.

## இலங்கை - இந்திய அரசாங்கங்கள்

# 17 வருடங்களுக்கு முன் விட்ட தவறுகளை இனிமேலாவது திருத்திக்கொள்ளவேண்டும்



(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்திய அரசுகள் 17 வருடங்கட 5 முன்னர் விட்ட வரலாற்றுத் தவறின் காரணமாகவே இன்று அவர்கள் பாரிய பின்னடைவுகளையும், சர்வதேச அழுத்தங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலய வட வீதியில் இடம்பெற்ற தியாகி லெப்டினன் கேணல் திலீபனின் 17 வது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களது அடிப்படை வாழ்வுரிமை மற்றும் அரசியல் அபிலாஷைகள் அடங்கிய 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் நல்லைக் கந்தன் ஆலய வீதியில் உண்ணாநோன்பிருந்தார்.

ஆனால், தமிழ் மக்கள் சம்பந்தமாக அவர் வைத்திருந்த கோரிக்கைகளை ஒரு பொருட்டாக ஏற்காத இலங்கை - இந்திய அரசுகள் தொடர்ந்தம் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்புக்களையும், அடக்குமுறைகளையும் திணித்தது. இதனால் திலீபன் தமிழ் மக்கள் சார்பாக முன்வைத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. இது தமிழ் மக்களுக்கு விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை உணர்த்தியது.

எமக்கென்றொரு போராட்டமும், எமக்கென்றொரு தலைமையும் மிக அவசியமென்ற உண்மையை உணர்ந்துகொண்ட தமிழ் மக்கள், ஆயுத வழியி.. தமது உரிமைகளை வென்றெடுக்க எழுச்சிகொண்டனர். இதன் விளைவாகவே தமிழீழத் தேசிய தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்போராட்டம் உத்வேகம்பெற்றது.

தியாகி திலீபன் உட்பட அனைத்து மாவீரர்களதும் தியாகங்கள், சாதனைகள் என்பன தமிழ் இன்த்தின் தேசிய விழிப்புணர்வு நாளங்களை தூண்டியது. இதனால் விடுதலை வேட்கையுடன் வீறுகொண்டு எழுந்து போராடிய தமிழர்கள், இலங்கை அரசிற்கு சமனான இராணுவ அரசியல், நிர்வாகம் போன்ற சகல கட்டுமானங்களுடனும் கூடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவானது.

இவ்வாறு இலங்கை அரசிற்கு சமபலமுள்ள அமைப்பாக விடுதலைப் புலிகள் நிமிர்ந்ததனால், இலங்கை அரசின் செயற்பாடுகளாக இருந்தாலும், இந்திய உபகண்ட அரசின் செயற்பாடுகளாக இருந்தாலும் அவை தமிழர்களது நலனைப் பேணாத செயற்பாடுகளாக இருக்கவேமுடியாது. அவ்வாறு பேணாதிருப்பின் அவை சர்வதேச அழுத்தங்களுக்கு இலக்காகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கடந்த 17 வருடங்களுக்கு முன் தியாகி திலீபனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை இவ்விரு அரசும் ஏற்றிருந்தால் இன்று இவர்களுக்கு இத்தகைய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது .

விரும்பியோ விரும்பாமலோ புலிகள் தலைமையிலான தமிழர்கள் அரசை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. இன்று இரு நாடுகளுக்கு இடையில் இடம்பெறுவது போல புலிகள் தலைமையிலான தமிழர் அரசுக்கும் - இலங்கை அரசுக்கும் இடையே யுத்தநிறுத்தம் ஏற்பட்டுள்ளது. பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. கைதிகள் பரிமாற்றம் இடம்பெறுகின்றன.

அந்த அடிப்படையில் பலமான நிலையில் உள்ள தமிழர் தரப்பு, அரசிற்கு கொடுத்திருக்கும் இறுதிவாய்ப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலான பேச்சு என்ற புலிகளின் நிபந்தனையை ஏற்று இலங்கை அரசு இறுதி அரசியல் தீர்வுநோக்கி சமாதானப் பேச்சுக்களை நகர்த்தவேண்டும். இதற்கான அழுத்தங்களை ஏனைய உபகண்ட வல்லாதிக்கங்களும், சர்வதேச சமூகமும் வழங்கவேண்டும்.

இல்லாவிட்டால் மீண்டும் பாரிய குழப்பங்கள் உருவாகி இலங்கை மீளமுடியாத பாதாளம் நோக்கிச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ப-19,43)

# தியாகி திலீபனின் இலட்சிய வேட்கை நிறைவேறும் நாள் வெகுதூரத்திலில்லை

## தீவகக் கோட்டப் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

எம்மக்களின் வாழ்வுக்காகச் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை தியாகம் செய்த திலீபனுடைய எண்ணம் நிறைவேறும்நாள் வெகுதூரத்திலில்லை. திலீபனின் பாதையில் நாம் நடப்போம். தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் திலீபனின் தியாகம் அற்புதமானது எனத் தெரிவித்தார் தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் ந.கண்ணன்.

நாம் விழிப்பாக இருக்காவிட்டால் எமது போராட்டத்திற்கு ஆபத்து என்று திலீபன் கூறியது போல, மக்கள் பெரும் புரட்சிக்குத் தயாராகவேண்டும். எம் இனத்தின் எழுச்சியே எமது வாழ்வைத் தீர்மானிக்கும் என வேலணையில் நடை. பற்ற தியாகி திலீபன் நினைவுநாள் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை ஒழுங்கு செய்த தியாகி திலீபனின் 17வது ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெற்ற அடையாள உண்ணாவிரத நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பொதுச்சுடரினை தீவகக்கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை வேலணைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ்நம்பி ஏற்றிவைத்தார்.


வேலணை பிரதேச பொதுமக்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவு மற்றும் தனியார்துறை ஊழியர்கள் என ஆயிரக்கணக்கானோர் இதில் பங்குபற்றி சிறப்பித்தனர்.

வேலணை பிரதேச சபை செயலாளர் சண்முகராசா, பிரதேச செயலர் நந்தகோபாலன், வேலணை ம.ம.வித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர். இறுதியில் நீராகாரம் வழங்கி நிகழ்வுகள் முடித்து வைக்கப்பட்டன.

(ற)

## 521ஆவது படையணியினர்

# பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு





யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 521 ஆவது படையணியினர் கைதடி, நாவற்குழி பகுதியிலுள்ள செல்வயல் பாலர் பாடசாலைக்கு மிக அவசியமான பாடசாலை உபகரணங்களை அண்மையில் வழங்கினர்.

இவற்றைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை காலை பாதுகாப்புப் படையினரின் தலைமையில் இடம்பெற்றன.

இப்பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கு தேவையான மேசை, கதிரைகள், தண்ணீர்ப்போத்தல்கள், (சிலேட்டு) எழுதுகூர்கள், எழுதுபலகைகள், தமிழ், சிங்கள, ஆங்கில பாலர் பாடசாலைப் புத்தகங்கள், பேனைகள் மற்றும் பாலர்பாடசாலை ஆசிரியர்களின் தேவைக்கான கதிரை, மேசை போன்றனவும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச வாசிகள் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வின்போது அங்கு சமுகமளித்திருந்தவர்களுக்கு தேநீர் விருந்துபசாரமும் வழங்கப்பட்டதுடன், முன்பள்ளிச் சிறுவர்களுக்கு இனிப்புத் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன.

கற்றல் கற்பித்தலுக்குப் போதிய வசதிகள் இன்றி அந்தப் பாடசாலை இயங்கிவந்தது. தற்போது இராணுவத்தினரால் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டமையினால் பிள்ளைகள் நன்மையடைந்துள்ளார்கள்.

இந்த உபகரணங்கள் அன்பளிப்பு நிகழ்வில் கைதடி, நாவற்குழி மகாலக்சுமி வித்தியாலய அதிபரும், அப்பிரதேச கிராம உத்தியோகஸ்தர்கள், பிரதேசவாசிகள், 52 ஆவது சேனையகக் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் எவ்.ஏ. ஜயசூரிய, லெப்டினன் கேணல் எம்.ஏ.எம்.டயஸ் உட்பட இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ற)

## திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடாத்தும் திருக்குறள் மாநாடு இன்றும் நாளையும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. (ற)

## கோண்டாவிலில் துணிகரத் திருட்டு

ஜன்னல் கம்பியை வளைத்து வீட்டினுள் நுழைந்த திருடன் கத்திமுனையில் பெண்மணியின் கழுத்தில் கிடந்த சங்கிலியை அபகரித்துச் சென்றான்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு கோண்டாவில் ஞானவைரவர் வீதியில் உள்ள மருதலிங்கம் என்பவரது வீட்டில் நடைபெற்றுள்ளது.

அண்மைக்காலமாக இப்பகுதியில் கள்வர்களின் கைவரிசை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-130)

## இலங்கை...

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கு மாகாணத்தினை நிரந்தரமாக இணைக்கும் முடிவினால் வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தின் முஸ்லிம் மக்களின் அரசியற் கருத்துக்கள் பல வீனப்படும்.

இந்தியா கடந்தகால பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய கொள்கையில் பல புதிய பரிணாமங்களைச் சரியாக அடையாளங்கண்டுகொண்டுள்ளது. அந்த வகையில் இந்திய நாடாளுமன்றில் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் புதிய அரசின் கொள்கை விளக்கவுரையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்திய நிலைப்பாடுகள் குறித்த சில விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார். (ம-8)

## சாதகமான...


வேகத்தில் எங்களால் பஸ்கட்டணங்களை உயர்த்தமுடியாது. அவ்வாறு செய்யமுற்பட்டால் அதனால் பொதுமக்களே பாதிப்படைவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

## தமிழ்ச்செல்வன்...

செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் சட்ட அரசியல் அமைப்பு நிபுணர்களான பேராசிரியர் சொர்ணராஜா, பேராசிரியர் இராமசாமி, முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, சட்டத்தரணி விஸ்வேந்திரன், போல்ரெனிக் (அவுஸ்திரேலியா), வி.உருத்திரகுமார் உட்படப் பலர் பங்குபற்றவுள்ளனர்.

இச்சந்திப்புக்களையடுத்து அடுத்த மாதம் முதலாம் திகதி அளவில் சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், அகதிகளுக்கான ஐக்கிய நாட்டு உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், ஐ.நா மனிதஉரிமை ஆணைக்குழுவினர், அதிகாரிகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேசவுள்ளனர்.

இச்சந்திப்புக்கள் முடிவடைந்தபின் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், சமாதான சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். (ம)



நல்லூரில் நடைபெற்ற திலீபனின் நினைவுதின நிகழ்வில் திரண்டிருந்த மக்களில் ஒருபகுதியினர்

## தியாகி திலீபனின்...

தீவகக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் த.சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன், தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் குகன் ஆகியோர் உரையாற்றினர்.

**காரைநகர்**

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் பிரதேச செயலர் வே.சிற்சபேசன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. தேசியக்கொடியை யாழ். மாவட்ட விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றிவைக்க, காரைநகர் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் மலர் மாலை அணிவித்தார்.

**தென்மராட்சி**

தென்மராட்சியில் தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய பேரணி பான்ட் வாத்திய அணிவகுப்புடன் பொதுமக்கள் குழுமிவர சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட பந்தலுக்கு எடுத்துவரப்பட்டது.

மாவீரர்களான டெமன், கோபால ஆகியோரின் பெற்றோர்கள் பொதுச் சுடரினையும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தேசியக் கொடியினையும், ஈகச்சுடரினை கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் வல்லிபுரம் உட்பட மற்றும் பலர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.அருந்தவபாலன் உண்ணாநோன்பை ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரைகளை யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி உட்பட பலர் ஆற்றினார்கள்

**வடமராட்சி**

வடமரட்சி அல்வாய் முத்து மாரிஅம்மன் ஆலயமுன்றலில் இடம்பெற்ற நிகழ்வுகள், கரவெட்டிப் பிரதேச தேசிய எழுச்சி பேரவையின் செயலாளர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, தேசியகொடியினை வடமராட்சி கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தயா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நல்லூர் கந்தன் ஆலயமுன்றலில் இடம்பெற்ற நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக, நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத்தூபிக்கு மாவீரர் மேஜர் கண்ணனின் தாயார் தேவநாயகி சண்முகலிங்கம் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார்

இதனைத் தொடர்ந்து தியாகி திலீபனின் நினைவுத்தூபிக்கு யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.செல்வக்குமரன் மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரமுகர்களும் மலர்மாலை அணிவித்தபின் திலீபனின் திருவுருவப் படம் திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர்கந்தன் ஆலயத்தின் வடகிழக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது.

(ம-75-5-19-8-122-130-43-39-246)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு....

காட்டுகின்றது. இந்நிலையில் இதற்கான தீர்வை அரசாங்கம் காணவேண்டும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது முழு ஆதரவினையும் வழங்கத் தயாராக இருக்கின்றது. இந்நிலைப்பாட்டை அரசாங்கத்திற்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளோம். இதனடிப்படையில் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கத் தயார் என்று கூறியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால்தான் நாமும் அதில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கமுடியும். இந்த ஆலோசனைகளை ஒரு தேசிய சபை மூலமாகவோ அல்லது வேறெந்த சாத்தியமான வழிகளில் எமது ஆலோசனைகள் நிச்சயம் அரசுக்குக் கிடைக்கும் என்று கூறிய ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி ஐ.நா சபையில் பேசியதுபோல் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு காண்பதில் எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் அதனடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதா அல்லது இல்லையா என்பதை ஜனாதிபதிதான் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஜனாதிபதியின் ஐ.நா. உரைக்கு மகாநாயக்கர்கள் பாராட்டு

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையினை மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகள் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உலகிலுள்ள சகல மதங்களையும் வேறுபாடு இன்றி கௌரவிக்கவேண்டும் என்றும், வர்த்தக வியாபார நோக்கங்களுக்காக சமய சின்னங்களை பயன்படுத்துவதை எதிர்த்தும் ஐ.நா பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி கருத்து தெருவித்தமைக்கே மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதியின் ஐ.நா உரை பலரது கண்களைத் திறந்துள்ளது. மதங்களுக்கு எதிரான இயக்கங்களின் செயற்பாடுகளை நிறுத்தும் பொருட்டு அனைத்து உலகத் தலைவர்களும் கூட்டு முயற்சியினை மேற்கொள்ளவேண்டும் என்று மல்வத்தபீட மகாநாயக்கர் சங்கைக்குரிய திப்பாட்டுவவே ஸ்ரீ சுமங்களதேரர் தெரிவித்துள்ளார்

அஸ்கிரிய பீடத்தின் பேராசிரியர் சங்கைக்குரிய தம்மாலோக தேரரின் செயலாளர் ஜனாதிபதியின் உரை குறித்து கருத்து வெளியிடுகையில் பௌத்த மக்களும், மகாசங்கத்தினரும ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ற-8)

## மருதனார்மடத்தில் மணிக்கூட்டுக் கோபுரம்

(இணுவில்)

மருதனார்மடம் சந்தியில் மணிக்கூட்டு கோபுரம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இணுவில் அரிமாக்கழகத்தினால் அமைக்கப்பட்ட இம் மணிக்கூட்டு கோபுரத்தை இன்று காலை 11.30 மணிக்கு றோட்டறியன் ஆளுநர் டி.எம்.சுவாமிநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச-122)


எமது யாழ்ப்பாணக் கல்லூரியில்
அளப்பரும் சேவையாற்றி
ஓய்வுபெற்ற ஆசிரியர்களான



திருமதி ஜி.இரத்தினசபாபதி



திருமதி சு.கேசவராஜன்



திரு. ந.தற்பரானந்தன்



திரு. செ.இராஜேஸ்வரன்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

யாழ்ப்பாணக் கல்லூரி
மாணவர் சமூகம்

(C-574)



பதவி வெற்றிடம்

() பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.
() பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(சொந்தமான மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது அவசியம்)

யாழ். நகரப் பகுதியிலிருந்து 10 கி.மீ தூரத்துக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதியுடையவர்கள் 28.09.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி நிர்வாக உத்தியோகத்தர்
இல.15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



வேலை வாய்ப்பு

கணனித் தட்டெழுத்தாளர் (Computer Typist)
கட்டுநர் (Binder) எழுதுநர் (Clerk)

ஆகிய பதவிகளில் இணைய விரும்புபவர்கள் உரிய சான்றிதழ்களுடன் 28-09-2004 செவ்வாய் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7086


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 2[illegible].09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.